இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்டி எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us
# தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 64 சோபகிருது வருடம், புரட்டாசி மாதம் 02ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(19.09.2023) ஹிஜ்ரி 1445, ரபிஉல் அவ்வல் - 03, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

Special offer
1st to 30th September 2023
KDK SINCE 1909 JAPAN
DISCOUNT 15% (On selected models only) *Conditions apply
Cash or Card
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
அங்கீகரிக்கப்பட்ட ஏகவிநியோகஸ்தர்கள்
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# உத்திக எம்.பி. மீது துப்பாக்கிச்சூடு!



## மயிரிழையில் தப்பினார்; விசாரணைகள் சி.ஐ.டியிடம்

அநுராதபுரம் நிருபர்

அநுராதபுரம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவை இலக்குவைத்து நேற்று முன்தினமிரவு அவரது வீட்டுக்கருகில் இனந் தெரியாத ஆயுதக்குழு நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைகள் அனைத்தும் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய உடன் அமுலுக்கு வரும் வகையில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என அநுராதபுரம் வலயத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட....

02 பக்கம்

## அத்தியாவசிய சேவை: அறிவிப்பு நீடிப்பு



2023 செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் பல துறைகளின் அத்தியாவசிய சேவைகளின் பிரகடனத்தை நீடிக்கும் அதி விஷேட வர்த்தமானியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார்.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் பிரிவு - 2 இன் படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார விநியோகத்துடன் இணைக் கப்பட்ட அனைத்து சேவைகளும் பெற்றோலியப் பொருட்கள் மற்றும் எரிபொருளை வழங்குதல் அல்லது விநியோகிப்பது அத்தியாவசிய சேவைகள் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிற ஒத்த நிறுவனங்களில் அத்தியாவசிய சேவைகளாக உள்ள நோயாளிகளின் பராமரிப்பு மற்றும் வரவேற்பு, பராமரிப்பு உணவு மற்றும் சிகிச்சை தொடர்பாக அனைத்து சேவை, வேலை அல்லது உழைப்பு, தேவையான அல்லது செய்யவேண்டிய விவரங்கள் என்பன அத்தியாவசிய சேவை என்று வர்த்தமானி கூறுகிறது.




எம்.பி மாருக்கு கெட்ட நேரம் போல..!

## க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஒத்திவைப்பு

எதிர்வரும் நவெம்பர் மாதம் நடைபெறவிருந்த 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்கும் தீர்மானம் ஏற்கனவே கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய பின்னர் இது தொடர்பான முடிவுகள் இறுதி செய்யப்படும்.

## திலீபனின் நினைவு ஊர்தி பவனிக்கு தடை கோரி பொலிஸார் மனு

### வவுனியா நீதிமன்றம் நிராகரிப்பு

சிவகுமார் திவியா




தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தியானது வவுனியாவில் பயணிப்பதற்கு பொலிஸார் தடை கோரி வவுனியா நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்த போதும், நீதிமன்றம் அதனை நிராகரித்து, குழப்பங்கள் ஏற்படாத வகையில் பொலிஸ் பாதுகாப்பை வழங்குமாறு நேற்று (18) உத்தரவு பிறப்பித்துள்ளது.

02 பக்கம்

## மனித உரிமை மீறல்கள் பாதிப்பை ஏற்படுத்தும்!

### கண்காணிப்பகம் அறிக்கை




இலங்கை அரசாங்கத்தில் தொடரும் மனிதஉரிமை துஷ்பிரயோகங்கள் உத்தேச நல்லிணக்க உண்மை ஆணைக் குழுவின் நோக்கங்களிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித் துள்ளது.

சர்வதேச மனித உரிமைக் கண்காணிப் பகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இதனைத் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் உத்தேச ஆணைக்குழு குறித்து கடந்தகால...

02 பக்கம்

## கஜேந்திரன், பிரேமரத்ன சமமாக கணியுங்கள்

### டிரான் அலஸிடம் மனோ





''எம்.பி. கஜேந்திரன் மீது திருகோணமலையில் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தையும், எம்.பி. உத்திக பிரேமரத்ன மீதான அநுராதபுர துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையும் ஒரே மாதிரியான சட்டம், ஒழுங்குப் பிரச்சினையாகக் கருதி, விசாரித்து, குற்றவாளிகளைக் கைது செய்யுங்கள் என சட்டம், ஒழுங்கு துறை அமைச்சர் டிரான் அலஸிடம் கூறினேன். அப்படியே தான் செய்வதாக அமைச்சர் என்னிடம் உறுதியளித்தார். இதுபற்றி தற்சமயம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் தொலைபேசியில் நான் தொடர்பு கொண்டு அறிவித்தேன்'' என தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

## தனியார் பஸ் முறைகேடுகள்

### முறைப்பாடளிக்க இலக்கம்



மேல்மாகாணத்தில் இயங்கும் தனியார் பஸ்களில் ஏற்படும் தவறுகள் - முறை கேடுகள் தொடர்பில் முறையிடுவதற்கு தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசி இலக்கத்துக்கான அறிமுகம் நேற்று (18) பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தலைமையில் மேற்கொள்ளப் பட்டது.

அதன்படி, தனியார் பஸ்களில் தொடர்புடைய தொலைபேசி எண் அடங்கிய ஸ்ரிக்கரும் ஒட்டப்பட்டது.

மேல் மாகாணத்தில் இயங்கும் தனியார் பஸ்களில் ஏற்படும் தவறுகள் தொடர்பில் பயணிகள் 0112 860860 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும்.

02 பக்கம்

## ஆசியக் கிண்ணத்தை இழந்த இலங்கை அணிக்கு எதிராக

### பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு




ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவுக்கு எதிராக இலங்கை அணி தோல்வி அடைந்தமை குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு புரவெசி பலய அமைப்பு பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடொன்றை அளித்துள்ளது.

02 பக்கம்

## ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் அரசியலா?

### கேட்கிறார் திஸ்ஸ எம்.பி.



கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்தமை தொடர்பில் அரசியல் உள்ளதா என விசாரணை நடத்தப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி கோரியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வியின்போது இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கையின் தோல்வி, நேற்று முன்தினம் தமது பிறந்தநாளைக் கொண்டாடிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு பிறந்தநாள் பரிசாக...

02 பக்கம்

## போதையில் வாகனம் செலுத்தி மூவரை மோதித்தள்ளிய கோடீஸ்வரர்



மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரை விபத்துக்குள்ளாக்கிய கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதிக மதுபோதையில் சொகுசுக் காரில் பயணித்த குறித்த கோடீஸ்வர வர்த்தகர் விபத்தை ஏற்படுத்தி தப்பிச்சென்று வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

02 பக்கம்

## திலீபனின் உருவச்சிலை ஊர்தி தாக்குதல்! கைதான அறுவருக்கும் விளக்கமறியல்



அப்துல் சலாம் யாசீம்

திருகோணமலை-சர்தாபுர பகுதியில் திலீபனின் உருவச்சிலை பாரவூர்தி மீது தாக்குதல் நடத்தியதுடன் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட 14 பேரைத் தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற மேலதிக நீதவான் அண்ணாத்துரை தர்ஷினி முன்னிலையில் நேற்று (18) குறித்த சந்தேகநபர்களை ஆஜர்படுத்திய போதே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை -கொழும்பு வீதியினூடாக வாகனம்...

02 பக்கம்

## உஷ்



ரணில் தலைமையில் அமையவுள்ள அரசியல் கூட்டணியில் இணையுமாறு அந்த கூட்டணியின் ஏற்பாட்டாளரான நிமல் லான்சா, சம்பிக்க ரணவக்க, சரத் பொன்சேகா ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அந்த பேச்சில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தகவல் .

கூட்டணியில் சேர நிபந்தனைகள் அவர்களால் விதிக்கப்பட்டுள்ளதாக தகவல்.

# இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நாட்டின் வீதிக் கட்டமைப்புப் பணிகளை விரைவாக ஆரம்பிக்கத் திட்டம்

## நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத்



இடைநடுவில் கைவிடப்பட்டுள்ள நாட்டின் வீதிக் கட்டமைப்பின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத் தெரிவித்தார்.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டு, அந்த வீதிகளின் நிர்மாணப் பணிகள் துரிதமாகப் பூர்த்தி செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத்,

நான் இராஜாங்க அமைச்சராகப் பதவியேற்கும் போது நாட்டின் பல நெடுஞ்சாலைத் திட்டங்கள் இடைநடுவில் கைவிடப்பட்டிருந்தன. ஒப்பந்தக்காரர்களுக்கு பணம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. சுமார் 180 பில்லியன் ரூபா ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது.

அவ்வாறு வழங்கவேண்டியிருந்த தொகையில் தற்போது சுமார் 151 பில்லியன் ரூபா குறித்த ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சுமார் 29 மில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. நிலுவைத் தொகை வழங்கப்படுவதால், ஒப்பந்தக்காரர்கள் மீண்டும் நெடுஞ்சாலைத் திட்டப்பணிகளை ஆரம்பத்துள்ளனர். கடந்த காலங்களில் செலுத்த முடியாமல் இருந்த பெரும் நிலுவைத் தொகை தற்போது வழங்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு, வீதி அபிவிருத்திப் பணிகள் குறித்து முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

A மற்றும் B தர வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பராமரிக்கப்படுகின்றன. இந்த நாட்டில் வருடாந்தம் 12,225 கிலோமீற்றர் நெடுஞ்சாலைகள் மற்றும் 312 கிலோமீற்றர் அதிவேகப் பாதைகள், 5432 பாலங்கள், 12 மேம்பாலங்கள் போன்றவற்றை வீதி அபிவிருத்தி அதிகார சபை பராமரித்து வருகின்றது.

மக்களின் தனிப்பட்ட வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் கல்வி மற்றும் சுகாதாரப் பணிகளை சிறப்பாக செயற்படுத்தவும் ஒரு நாட்டின் வீதிக் கட்டமைப்பு மிகவும் முக்கியமானது. இன்று அனைவரும் உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பில் கவனம் செலுத்துகிறார்கள். அந்த வகையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை நாட்டின் பல்வேறு பிரதேசங்களுக்கு எடுத்துச்செல்ல போக்குவரத்து வசதிகள் சிறந்த முறையில் அமைய வேண்டும். எனவே வீதிக்கட்டமைப்பு ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கு இன்றியமையாததாக உள்ளது.

எமது நாட்டின் வீதிக் கட்டமைப்பு நன்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வீதிகளை விரிவுபடுத்தி மேம்படுத்த வேண்டும். வீதி அபிவிருத்திக்கு வெளிநாட்டு முதலீடுகள் கிடைப்பது குறைவு. சிறிய பாலங்கள் மற்றும் நெடுஞ்சாலைகளை பராமரிக்க ஆண்டுதோறும் ஏராளமான பணத்தை செலவிட வேண்டியுள்ளது.

அதிவேகப் பாதைகள் ஒரு நாட்டுக்கு அவசியம். எமது நாட்டில் ஏற்பட்ட டொலர் பிரச்சினை மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளைப் பாதித்தது. மீரிகம, குருநாகல் அதிவேகப் பாதையின் பணிகள் நிறைவடைந்துள்ளன. பொத்துஹெர தொடக்கம் கலகெதர வரையான 31 கிலோமீற்றர் கொண்ட அதிவேகப் பாதையின் முதல் 13 கிலோ மீற்றருக்கான பணிகள் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன.

2019 இல் ஆரம்பிக்கப்பட்ட துறைமுக நுழைவாயில் வழியிலான வீதி நாட்டுக்கு மிகவும் முக்கியமானது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ் இப்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. புதிய களனிப் பாலத்தில் இருந்து காலிமுகத்திடல் வரையான தூண்களுக்கு மேல் செல்லும் விசேட வீதியின் மூலம் கொழும்பு கோட்டை மற்றும் துறைமுகம் போன்ற பரபரப்பான பகுதிகளில் தற்போது நிலவக்கூடிய போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும். இப் பாதையை 2024 ஆம் ஆண்டில் மக்கள் பாவனைக்குக் கையளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், கொஹுவல மேம்பாலத்தின் 85% பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும் ஹங்கேரிய நாட்டின் கடனுதவியின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் பேராதனை மேம்பாலத்தின் 35% பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஒரு இலட்சம் வீதிகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் 13,160 வீதிகள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வீதிகள் 17,850. கிலோமீட்டர்களாகும். அதில், 5201 வீதிகள் அதாவது 6300 கி.மீ. வீதிகளின் பணிகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இந்த மொத்தத் திட்டமான 17,850 கிலோமீற்றர் வீதிகளை அமைப்பதற்கு அரசாங்கம் 231 பில்லியன் ரூபாவை மதிப்பிட்டுள்ளது. தற்போது பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களுக்காக 160 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் 70 பில்லியன் ரூபா செலுத்த வேண்டியுள்ளது.

இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள நாட்டின் வீதி அபிவிருத்திப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் நாட்டின் நெடுஞ்சாலைகளை பராமரிக்கவும் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ள திட்டங்களை மீண்டும் தொடங்கவும் பணம் ஒதுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால், குறித்த பணிகளை விரைவில் நிறைவு செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

# அமெ. - இலங்கை வர்த்தக, முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான 14ஆவது கவுன்சில் கூட்டம் கொழும்பில்



அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான (TIFA) 14 ஆவது கவுன்சில் கூட்டம் நேற்று (18) கொழும்பில் இடம்பெற்றது.

இலங்கை அரசின் சார்பில் சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் பிரதம பேச்சுவார்த்தையாளர் கே.ஜே.வீரசிங்கவும் அமெரிக்கத் தரப்பில் இருந்து தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் ஐ.நாவுக்கான பதில் உதவி வர்த்தகப் பிரதிநிதியான பிரெண்டன் லிஞ்ச் (Mr. Brendan Lynch, Acting Assistant United States Trade Representative for South and Central Asia) ஆகியோர் இந்த தொழில்நுட்ப மட்டக் கூட்டத்துக்கு இணைத் தலைமை தாங்கினர்.

வர்த்தகம், முதலீடு, சுங்கம், தொழிலாளர் உறவுகள், புலமைச் சொத்து, விவசாயம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவன அதிகாரிகள் இந்தப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்(Julie J. Chung) மற்றும் ஜனாதிபதியின் பதில் செயலாளர் சாந்தனி விஜேவர்தன ஆகியோர் சந்திப்பின் ஆரம்ப நிகழ்வில் கருத்துத் தெரிவித்தனர்.

வர்த்தகம் மற்றும் முதலீட்டு கட்டமைப்பு ஒப்பந்தம் தொடர்பான கவுன்சில் கூட்டத்தில், முதலீட்டு சூழலை பாதிக்கும் கொள்கைகள், அண்மைய தொழிலாளர் சட்ட மறுசீரமைப்புகள், புலமைச் சொத்து பாதுகாப்பு மற்றும் அமுல்படுத்தல் , சுங்கம் மற்றும் வர்த்தக வசதி அளித்தல், வர்த்தகத்தைப் பாதிக்கும் தொழில்நுட்பத் தடைகள், ஆடைகள், இரத்தினங்கள் மற்றும் நகைகள் அதே போன்று விவசாயத்துக்கான சந்தைப் பிரவேசம் உட்பட இரு நாடுகளும் பரந்தளவிலான இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு தொடர்பான விவகாரங்களில் கவனம் செலுத்தின.

டிஜிட்டல் பொருளாதாரம், இரத்தினங்கள் மற்றும் ஆபரணக் கைத்தொழில், மலர் வளர்ப்பு, படகு கட்டும் துறைகள் மற்றும் தென்னை ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் ஆராய்ச்சி வணிகமயமாக்கல் தொடர்பான ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவி குறித்தும் ஆராயப்பட்டது.

அண்மையில் முன்மொழியப்பட்ட ஊழல் எதிர்ப்புச் சட்டம் பற்றிய புதுப்பிக்கப்பட்ட தகவல் களை இலங்கை முன்வைத்ததோடு இலஞ்சம் மற்றும் அனைத்து வகையான ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு அமெரிக்க அரசாங்கத்தின் தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சியைக் கோரியது. இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விவசாயப் பொருட்களுக்கான வர்த்தகத் தடைகளைக் மட்டுப்படுத்துவதை அமெரிக்கா ஊக்குவித்தது. இலங்கையின் உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்வதற்காக, கால்நடைத் தீவனம் (input products) உட்பட பல்வேறு விவசாய பொருட்கள் ஏற்றுமதிக்கான அதிக சந்தை வாய்ப்பை பெற்றுத்தருவதாக அமெரிக்கா கருத்து வெளியிட்டது. 2024 இல் நடைபெறவிருக்கும் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு கூட்டத்துக்கு முன்னதாக வர்த்தக விவகாரங்களில் நிலை யான முன்னேற்றத்தை ஏற்படுத்த இரு நாடுக ளும் இணக்கம் தெரிவித்தன. துறைசார் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# ஒக்டோபர் முதல் ஹோட்டல்களுக்கு குறைந்தபட்ச அறைக் கட்டணங்கள்

கொழும்பு நகர ஹோட்டல்களுக்கான குறைந்தபட்ச அறைக் கட்டணங்களை (MRR) அறிமுகப்படுத்துவதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஒக்டோபர் 01 முதல் நடைமுறைக்கு வருகிறது.

இது தொடர்பில் ஹோட்டல்களின் பொது முகாமையாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் (SLTDA) தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புதிய கட்டளையானது விநியோக வழிகளில் அறை விலையை தரப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட தொடர்ச்சியான வழிகாட்டல்களை முன்வைக்கிறது .கொழும்பு நகர ஹோட்டல்கள் வர்த்தமானி அறிவிப்பை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும் .அறைக் கட்டணங்களில் சீரான தன்மையை உறுதி செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தமானி அறிவிப்பின்படி, கூட்டாண்மை மற்றும் இலவச சுயாதீன சுற்றுலாப் பயணிகளுக்கான (எஃப்ஐடி) விலைகள் தொடர்பாக வெவ்வேறு ஹோட்டல் வகைகளுக்கு இடமளிக்கும் வகையில் எம்ஆர்ஆர் அமைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

5-நட்சத்திர ஹோட்டல்களுக்கு $ 100, 4-நட்சத்திர ஹோட்டல்களுக்கு $ 75, 3-நட்சத்திர விடுதிகளுக்கு $ 50, 2-நட்சத்திர ஹோட்டல்களுக்கு $35 மற்றும் ஒரு நட்சத்திர சுற்றுலா ஹோட்டல்களுக்கு $ 20 விலைகள் உள்ளன. நிர்ணயிக்கப்பட்ட MRRக்குக் கீழே உள்ள ஒப்பந்தங்கள் அனைத்தும் ஒக்டோபர் 01 முதல் செல்லாது.

மேலும், விமான பணியாளர் அறைகளுக்கான விலைகள்

5-நட்சத்திர ஹோட்டல்களுக்கு $ 75, 4-நட்சத்திர ஹோட்டல்களுக்கு $ 55, 3-நட்சத்திர தங்குமிடங்களுக்கு $ 40, 2-நட்சத்திர ஹோட்டல்களுக்கு $ 30 மற்றும் ஒரு நட்சத்திர சுற்றுலா ஹோட்டல்களுக்கு $ 20.

இந்தத் திகதிக்கு முன் நிறைவேற்றப்பட்ட பணியாளர்கள் தங்குவதற்கான ஒப்பந்தங்கள், அவற்றின் தற்போதைய செல்லுபடியாகும் காலத்துக்கு மதிக்கப்படும்.

குழு முன்பதிவுகளுக்கு, கட்டணம் செலுத்தும் அறைகளின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல், 11ஆவது அறைக்கு ஒரு இலவச அறை நீடிக்கப்படும், அதிகபட்ச வரம்பு 10 இலவச அறைகளுக்குட்பட்டது.

ஹோட்டல்கள் இணக்கத்தை உறுதி செய்வதற்காக மேலதிக ஊக்கத்தொகைகளை வழங்குவது தடைசெய்யப்பட்டுள்ளது.

நகரின் விருந்தோம்பல் துறையில் தரநிலைகள் மற்றும் இலாபத்தில் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக இதனை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக SLTDA தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### திலீபன் உருவச்சிலை...

ஒன்றில் திலீபனின் உருவச் சிலையை கொண்டு வரும்போது சர்தாபுர பகுதியில் வைத்து வாகனங்களுக்கு சேதம் ஏற்படுத்தியதுடன் வாகனத்தில் வந்த குறித்த நபர்களை தாக்கியதாகவும் சீனக்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த சம்பவத்துடன் கைது செய்யப்பட்ட ஆறு பேரில் இரண்டு பெண்கள் அடங்குவதாகவும் 35ற்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்களுக்கு ஆறு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

### ஆசியக் கிண்ண...

வழங்கப்பட்டதா என்ற சந்தேகத்தை அவர் இதன்போது எழுப்பியுள்ளார். இந்தப்போட்டியில் தீவிரப்போட்டி ஒன்றை அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால் சில மணிநேரங்களில் அது முடிந்துவிட்டது. இது இலங்கை வீரர்களின் மன உறுதியைப் பாதிக்கும் என்ற நிலையில், தோல்வியில் அரசியல் உள்ளதா என்பது குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

இந்த விசாரணையை மேற்கொள்ளும் பொறுப்பு விளையாட்டுத்துறை அமைச்சிடம் வழங்கப்பட வேண்டுமா என வினவியபோது அதற்கு பதிலளித்த திஸ்ஸ அத்தநாயக்க, வடக்கில் புதிய மைதானம் அமைக்க நிதியொதுக்கியபோதும் அது அமைக்கப்படாத நிலையில், இந்த விசாரணையை அந்த அமைச்சிடம் கையளிக்கமுடியுமா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

### போதையில் வாகனம் செலுத்தி...

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் 14 வயதுடைய மகள் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில், அவர்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரதேசவாசிகளால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மூவருக்கும் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் அளவுக்கு அதிகமாக மது போதையில் விபத்தை ஏற்படுத்திய கோடீஸ்வர தொழிலதிபர் காயம் அடைந்தவர்களை பற்றி கவலைப்படாமல் தனது வீட்டுக்குச் சென்றுள்ளார்.

பின்னர் வீட்டின் அருகே ஜீப்பை நிறுத்திவிட்டு தூங்கச் சென்றுள்ளார். சந்தேக நபரை கைது செய்வதற்காக ஆனமடுவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று அவரது வீட்டுக்குச் சென்ற போது, பொலிஸாரின் கடமைகளுக்கும் இடையூறு ஏற்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

**கோடீஸ்வர வர்த்தகர் கைது**

ஆனால் எதிர்ப்பையும் மீறி கோடீஸ்வர வர்த்தகர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஆனமடுவ ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சுவாசப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது அதற்கும் அவர் தடை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டதாக தெரியவந் துள்ளது.

மதுபோதையில் விபத்து ஏற்படுத்தியமை, விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றமை, பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் சந்தேகநபரான வர்த்தகர் ஆனமடுவ நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அங்கு முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த ஆனமடுவ நீதவான் நிரோஷா பட்டபெந்திகே சந்தேகநபரான வர்த்தகரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. அத்துடன் சந்தேகநபரின் சாரதி அனுமதிப்பத் திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்தவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

### ஆசியக் கிண்ணத்தை இழந்த...

இலஞ்சம், ஊழல் மற்றும் வீண்விரயத்துக்கு எதிரான புரவெசி பலய அமைப்பின் தலைவர் ஜமுனி கமந்த துஷார இந்த முறைப்பாட்டை அளித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் இலங்கை அணி மிகக் குறைந்த ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தமை பலமான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. போட்டியை காட்டிக்கொடுத்துள்ளனரா என்ற சந்தேகம் எழுவதாகவும் குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில், இலங்கை அணி 50 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதுவே, இதுவரை இறுதிப் போட்டிகளில் இலங்கை அணி பெற்ற குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### உத்திக எம்.பி மீது...

பொலிஸ் அத்தியட்சகர் புஷ்பகுமார தெரிவித் தார்.அநுராதபுரம் விமான நிலைய வீதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினருடைய வீட்டுக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுதக்குழுவினர் உத்திக பிரேமரத்னவை இலக்குவைத்து அவரது சொந்த வாகனத்தின் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் பல கோணங்களில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.குறித்த சம்பவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன மயிரிழையில் உயிர்தப்பியுள்ளதுடன் வாகனத்துக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என அநுராதபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

### திலீபன் நினைவு ஊர்தி...

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் திலீபன் வழியில் வருகின்றோம் என்னும் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி பவனியானது பொத்துவிலில் ஆரம்பிக் கப்பட்டு, திருகோணமலையில் வலம் வந்த போது சிங்கள இனத்தைச் சேர்ந்த குழு ஒன்றினால் தாக் கப்பட்ட நிலையில் வவுனியாவை வந்தடைந்தது.குறித்த ஊர்தி பவனி வவுனியாவில் இடம்பெற்றால் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படுவதுடன், இன நல்லுறவு சீர்குலையும் என இருவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். குறித்த முறைப்பாட்டுக்கமைய இவ் ஊர்தி பவனிக்கு பொலிஸார் வவுனியா நீதிமன்றில் தடை உத்தரவு கோரியிருந்தனர்.

அதனை கவனத்தில் எடுத்த மன்று, இறந்தவர்களை நினைவு கூரும் உரிமை அனைவ ருக்கும் உள்ளது என்பதை சுட்டிக் காட்டி, பொலிஸாரின் கோரிக்கையை நிராகரித்ததுடன், இன முரண்பாடுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

### மனித உரிமை மீறல்கள்...

உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களது குடும்பத்தவர்கள், மனித உரிமை பாதுகாவலர்கள் ஆகியோருடன் கலந்தாலோசனைகளில் ஈடுபடாததால் அவர்கள் அவற்றை நிராகரித்துள்ளனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் கடந்தகால ஆணைக்குழுக்களின் ஆதாரங்களை புறக்கணித்துள்ளதும் பாதிக்கப்பட்டவர்கள் அவர்களது குடும்பத்தவர்கள் மனித உரிமை பாதுகாவலர்களை பாதுகாப்புப் படையினரின் முன் ஆபத்துக்குள்ளாக்கியுள்ளதும் அவர்கள் மீண்டும் ஆணைக்குழுக்களின் முன்னிலையில் தோன்றினால் மீண்டும் மன அழுத்தங்களுக்கு உள்ளாவார்கள் என்பதும் அவர்கள் உத்தேச ஆணைக்குழுவை நிராகரிப்பதற்கான காரணம் எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நாங்கள் எங்கள் குரல்களை எழுப்பினால் அவர்கள் எங்களை கைதுசெய்வார்கள் - இலங்கையின் உத்தேச உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற 39 பக்க அறிக்கையிலேயே சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இதனை தெரிவித்துள்ளது.

இந்த ஆவணம் இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின் போது காணாமல்போனவர்களின் (தமிழ் சிறுபான்மையினத்தவர்கள்) சார்பில் நீதிகோருபவர்கள் பரப்புரை செய்பவர்கள் செயற்பாட்டாளர்கள், பாதுகாப்பு படையினரால் கண்காணிக்கப்படுவது அச்சுறுத்தப்படுவதை ஆவணப்படுத்தியுள்ளது.

மாற்றுக்கருத்துடையவர்களை மௌனமாக்குவதற்காக அதிகாரிகள் மிகவும் ஆபத்தான பயங்கரவாத தடைச்சட்டதை பயன்படுத்துகின்றனர். உண்மை மற்றும் நல்லிணக்கத்தை கோருபவர்களுக்கு எதிராகவும் இதனை பயன்படுத்துகின்றனர் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை அரசாங்கத்தின் ஆதரவுடனான நில ஆக்கிரமிப்புகள் தமிழ் முஸ்லிம் சமூகத்தினரினது நிலத்தையும் அவர்களது வழிபாட்டு இடங்களையும் இலக்குவைக்கின்றன என வும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு உண்மையும் பொறுப்புக்கூறலும் மிகவும் அவசியமான விடயங்கள். ஆழமான தேவையான விடயங்கள் என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவுக்கான பிரதி இயக்குநர் மீனாக்சி கங்குலி,ஆனால் நம்பகத்தன்மை மிக்க செயற்பாடுகளுக்கு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்களின் ஆதரவும் அந்த சமூகங்களுக்கு எதிரான அரசாங்கத்தின் மனித உரிமை துஷ்பிரயோகங்கள் முடிவுக்கு வருவதும் அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் நோக்கம் காணாமல் போனவர்களின் நிலையை கண்டுபி டிப்பதோ அல்லது அதற்கு காரணமானவர்களை தண்டிப்பதோ இல்லை. மாறாக தண்டனையி லிருந்து விலக்களிக்கப்படுதல் குறித்த சர்வதேச சமூகத்தின் அழுத்தத்திலிருந்து தப்புவதே அரசாங்கத்தின் நோக்கம் என்பதை அதன் சமீபத்தைய அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தனியார் பஸ் முறைகேடுகள்...

பயணிகள் 076 0450860 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடு செய்ய வாய்ப்பு உள்ளதாக மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# வடிகாலமைப்புகளின் புனர்நிர்மாணங்கள் குறித்து இரு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்குக!

## ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல அதிகாரிகளுக்குப் பணிப்புரை



நாட்டிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து பெறப்பட்ட தொழில்நுட்பத் தகவல்களின் அடிப்படையில், அவற்றில் மேற்கொள்ளப்பட வேண்டிய புனர்நிர்மாணப் பணிகள் மற்றும் இதற்காக எதிர்பார்க்கப்படும் செலவுகளை உள்ளடக்கிய அறிக்கையொன்றை, இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்து, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் நீர் செல்லும் சுரங்கப்பாதைகளின் தற்போதைய நிலைவரங்கள் தொடர்பில் குறித்த துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகளுடன், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (18) இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே சாகல ரத்நாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் மின்சார சபைக்கு சொந்தமான நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை எடுத்துச் செல்லும் அனைத்து நீர்த்தேக்கங்கள், கால்வாய்கள் மற்றும் சுரங்கப்பாதைகளின் தொழில்நுட்பப் பாதுகாப்பு குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக, நீரை எடுத்துச்செல்லும் சுரங்கப்பாதைகள் அடைப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன், அவற்றில் சேர்ந்துள்ள மணல் மற்றும் சேற்றை அகற்றி அவற்றை புனர்நிர்மாணம் செய்தல், அண்மைக்கால நிலநடுக்கங்களால் அந்தந்தப் பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்கள் மற்றும் சுரங்கப்பாதைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் ஆண்டுதோறும் சாதாரண சூழ்நிலையில் நிகழும் பாதிப்புகள் போன்ற பிரச்சினைகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் மின்சார சபையின் பொறியியலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டுள்ளனர்.

# ஈஸ்டர் தின தாக்குதலின் உண்மை வெளிப்படாதவரை நாட்டில் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல்

## இந்த விவகாரத்தில் கோட்டா செய்ததையே தற்போது ரணிலும் முன்னெடுப்பதாக சஜித் குற்றச்சாட்டு




ஆட்சி முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என நாட்டு மக்கள் கோருகின்றனர். இந்நிலையில், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலையும் அதனால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையையும் அரசியலாக்காது முழுமையான உண்மையைத் தேடுவதே எதிர்க்கட்சியின் நோக்கம். அரசாங்கம் உண்மைகளையும் தரவுகளையும் மறைப்பதால், எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தமக்கும் சரியான உண்மைகள் தெரியாது என்பதனால், இது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துமாறே கோருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சி ஒன்றியத்தின் வாராந்த செயற்குழுக் கூட்டம் நேற்று (18) பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், இங்கு உண்மையை மறைப்பது என்பதிலிருந்து கைகளில் இரத்தம் தோய்ந்த நபர்களின் சதியோ என்று சந்தேகம் எழுகிறது. இந்தத் தாக்குதல் தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இங்கு உண்மை மறைக்கப்படுவது மாத்திரம் இடம்பெற்றுள்ளதால் அரசியல் சாதகங்களைப் பொருட்படுத்தாமல், முழுமையான உண்மையை இங்கு வெளிக் கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்கான பிரதான சூத்திரதாரிகளையும் ஏனைய காரணத்தையும் கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட அனைவரையும் தண்டிப்பதாக அளித்த வாக்குறுதிகளின் பிரகாரமே ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிக்கு 69 இலட்சம் மக்கள் ஆணை கிடைத்தாலும், அவர் அந்த உண்மையைத் தேடாது, உண்மையைக் கண்டறியாமல் பயங்கரவாதச் செயலை விசாரித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகள் பலரையும் அந்த நடவடிக்கைகளிலிருந்து நீக்கினார்.

கடந்தகாலங்களில் இடம்பெற்ற பல்வேறு செயற்பாடுகளைப் பார்க்கும்போது உண்மையைத் தேடுவதை விட உண்மை மறைக்கப்பட்டுள்ளதையே மேற்கொண்டுள்ளதாக தோன்றுகிறது. இதன் காரணமாக உண்மையைக் கண்டறியும் பொறுப்பைக்கூட கோட்டாபய புறக்கணித்துள்ளார்.

அவ்வாறே, தற்போதைய அரசாங்கமும் ஜனாதிபதியும், கோட்டாபய ராஜபக்ஷவைப் பின்பற்றி உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான உண்மையை மறைத்து வருகின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நேர்மையான, நம்பகமான, பக்கச்சார்பற்ற தேசிய விசாரணையைத்தான் விரும்பினாலும், கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களைப் பார்க்கும்போது, தேசிய விசாரணைகளில் அதிக நம்பிக்கை இல்லை. இவ்வாறான நிலையில் சர்வதேச விசாரணையே நடத்தப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் முதல் பாகம் மாத்திரமே வெளியிடப்பட்டிருந்த போதிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது பாகங்கள் குறைந்தபட்சம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது எதிர்க்கட்சித் தலைவரால் பரிசீலிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும், பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் மேற்பார்வையில் மாத்திரம் அதனை பரிசீலிக்க சந்தர்ப்பம் வழங்குவதில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் கூட மீறப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான சனல் 4 காணொளி தொடர்பில் விசாரணை நடத்த அரசாங்கம் நியமித்துள்ள புதிய குழுவுக்கு இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்களும் கர்தினாலும் அதிருப்தி தெரிவித்துள்ளனர். இவ்வாறு புதிய குழுக்களை நியமிப்பதாலும் கூட உண்மை மூடி மறைக்கப்படுகிறது.

மேலும் இவ்வாறான தாக்குதலுக்கு இந்நாட்டில் உள்ள அனைத்து மதங்கள் மற்றும் இனங்களைச் சேர்ந்த தீவிரப்போக்குடையவர்களும் பொறுப்பாளிகள். இந்த தீவிரவாதிகளால் இந்நாட்டின் தேசிய பாதுகாப்பு பறிபோனது. இந்தத் தாக்குதலின் உண்மை கண்டறியப்படாத வரை, இது தேசிய பாதுகாப்பிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, மதங்களுக்கும் இனங்களுக்கும் இடையில் காணப்படும் நம்பகமற்ற தன்மையையும் சந்தேகத்தையும் நீக்க உண்மையை வெளிப்படுத்த வேண்டும் - என்றார்.





ஆவணி விநாயகர் சதுர்த்தி விரத உற்சவத்தை முன்னிட்டு நேற்று (18) யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெரும்பாலான விநாயகர் ஆலயங்களில் சிறப்பான பூஜைகள் வழிபாடுகள் இடம்பெற்றன. இதனை முன்னிட்டு இணுவில் திருப்பதி வேங்கடேஸ்வரர் தேவஸ்தானத்திலும் ஆவணி விநாயகர் சதுர்த்தி விரத பூஜைகள் சிறப்பாக இடம்பெற்றன. படங்கள்: பு.கஜிந்தன்

# ஹரின் பெர்னாண்டோவின் அடிப்படை உரிமை மீறல் மனு மீளப்பெறல்

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பில் தம்மை கைதுசெய்வதை தடுக்குமாறு கோரி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு மீளப் பெறப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்கிய அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணையை முடிவுறுத்துமாறு சட்டமா அதிபர் காவல்துறையினருக்கு அண்மையில் பணிப்புரை விடுத்தார்.

இந்நிலையில், குறித்த மனுவை மீளப் பெற தீர்மானித்துள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றுக்கு அறிவித்தார்.

# தலைமன்னார் - கொழும்பு ரயில் சேவை விரைவில்

தலைமன்னார் துறைமுகத்திற்கும் கொழும்பு கோட்டைக்கும் இடையில் புதிய ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் தலைமன்னார் துறைமுக நிலையத்தில் இருந்து அதிகாலை 4.15 மணிக்குப் புறப்பட்டு 10.34 மணிக்கு கோட்டை நிலையத்தை அடைந்து மாலை 3.35 மணிக்கு கோட்டையிலிருந்து புறப்பட்டு இரவு 10.48 மணிக்கு தலைமன்னார் துறைமுகத்தை சென்றடையுமென ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து ரயில்வே துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

இந்த ரயிலில் குளிரூட்டப்பட்ட இரண்டு முதல் வகுப்புப் பெட்டிகள், இரண்டு இரண்டாம் வகுப்பு முன்பதிவு செய்யப்பட்ட இருக்கைப் பெட்டிகள் மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வகுப்பு சாதாரண பெட்டிகள் உள்ளதாக தெரிவித்தார்.

# இந்திய கடற்பரப்பில் மீன்பிடிப் படகு விபத்து

## மூவர் பாதுகாப்பாக மீட்பு



தொழில்நுட்பக் கோளாறினால் இந்திய கடற்பரப்புக்கு அடித்துச் செல்லப்பட்டு அனர்த்தத்துக்குள்ளாகிய மீன்பிடிப் படகிலிருந்து மீனவர்கள் மூவர் கடற்படையினரால் மீண்டும் நாட்டுக்கு நேற்று அழைத்துவரப்பட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடந்த 02ஆம் திகதி மீனவர்க்ள் மூவர், மீன்பிடி நடவடிக்கைகாக புறப்பட்டுச் சென்றுள்ளனர். இந்நிலையில், அவர்கள் பயணித்த மீன்பிடிப் படகில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இலங்கையில் வடக்கு கடற்பரப்புக்கு அடித்துச்செல்லப்பட்டு கடற்பரப்பில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

அதனைத் தொடர்ந்து செயற்பட்ட இலங்கை கடற்படையினர் மீனவர்களை மீட்டு மீண்டும் நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# துஷார சஞ்சீவ உள்ளிட்ட ஐவர் மீதான இடைக்காலத் தடை இடைநிறுத்தம்

குருநாகல் மாநகர சபை முன்னாள் முதல்வர் துஷார சஞ்சீவ விதாரண உள்ளிட்ட 5 பேருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை செயற்படுத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் விதித்த இடைக்காலத் தடையை, இடை நிறுத்துமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குருநாகல் நகரின் மத்தியில் அமைந்துள்ள தொல்லியல் பெறுமதிமிக்க புவனேகபாகு அரச சபை மண்டபத்துக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் இந்தப் பிடியாணை பிறப்பிக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த பிடியாணையை செயற்படுத்துவதை தடுக்கும் வகையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவொன்றை பிறப்பித்திருந்தது.

அந்தத் தடை உத்தரவை இடைநிறுத்தி தற்போது உயர்நீதிமன்றம் தடை உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளது.

# கட்டட நிர்மாணத்துறையின் பின்னடைவை தடுக்க ஜனாதிபதிக்கு முன்மொழிவு

கட்டட நிர்மாணத் தொழிற்துறையில் ஏற்படும் பின்னடைவைத் தவிர்ப்பதற்கு அவசியமான 13 முன்மொழிவுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்த தெரிவித்துள்ளார்.

நிர்மாணத்துறை தொடர்பில் ஆராய அமைச்சுகளின் செயலாளர்கள் தலைமையில் முன்னதாக ஆறு குழுக்களை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அந்தக் குழுக்களின் மூலம் யோசனைகள் கோரப்பட்டிருந்த நிலையில், அதற்காக 50 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 13 அவசர முன்மொழிவுகள் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசெல்லப் பட்டுள்ளன.

இந்நிலையில், 2024ஆம் ஆண்டுக்கான பாதீட்டுத் திட்டத்தில், கட்டட நிர்மாணத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்தியானந்த தெரிவித்துள்ளார்.

# செல்வராசா கஜேந்திரன் எம்.பியை உடனடியாக கைதுசெய்க!

## பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்வோம் என்கிறார் உதய கம்மன்பில



விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது தடைசெய்யப்பட்ட இயக்கமாகும். அவ்வாறு தடைசெய்யப்பட்ட இயக்கமொன்றின் உறுப்பினரை நினைவுகூர்ந்து, விடுதலைப் புலிகளால் பாதிக்கப்பட்ட கிழக்கிலுள்ள சிங்கள மக்கள் வாழும் குடியிருப்பினூடாக வாகன பேரணிச் சென்றது. அந்த மக்களை இனவாத ரீதியாக தூண்டிவிடும் சூழ்ச்சியாகும். ஆகவே, பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனை கைதுசெய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அவருக்கு எதிராக இன்று (19) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யவுள்ளதாகவும் பிவிதுரு ஹெலஉருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (18) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த திலீபனை நினைவுகூர்ந்து செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோர் கிழக்கிலிருந்து வடக்குக்கு பேரணியாக சென்றபோது நேற்று (நேற்று முன்தினம்) குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. அமிர்தலிங்கம் திலீபன் என்பவர், இந்த நாட்டை இரு பிரிவுகளாக்க புலிகள் அமைப்பு முன்னெடுத்த வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்.

நாட்டில் பிரிவினைவாதத்தையும், பயங்கரவாதத்தையும் ஊக்குவித்ததில் அவருக்கும் பங்கு இருக்கிறது. அவர் விடுதலைப் புலிகளின் நோக்கங்களுக்காக தனது உயிரை தியாகம் செய்தாவர். விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது இந்த நாட்டில் தடைசெய்யப்பட்டதொரு அமைப்பாகும். அந்த இயக்கத்தின் அடையாள நிறமான சிவப்பு மற்றும் மஞ்சள் நிறங்களில் பதாகைகளை நிர்மாணித்து, அதன் மீது திலீபனின் உருவப்படமொன்றைப் பொருத்தி கிழக்கிலிருந்து வடக்கு வரை வாகனப் பேரணியாக பயணிக்க யார் அனுமதி வழங்கியது. யாராவதொரு அதிகாரி அதற்கு அனுமதி வழங்கியிருந்தால், இலங்கை அரசியலமைப்பில் 157 (அ) உறுப்புரையை மீறி பிரிவினைவாதத்தை மேம்படுத்த குறித்த அதிகாரி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக குறித்த அதிகாரிகளுக்கு ஏதாவது அரசியல் ஆலோசனை கிடைத்திருந்தால் அவர்களை கைதுசெய்து அரசியலமைப்பின் 157 (அ) உறுப்புரையின் பிரகாரம் கைதுசெய்து வழக்குத் தொடர வேண்டும்.

மேலும், விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது சிங்கள மக்களை இலக்குவைத்து 300இற்கும் அதிகமான பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொண்ட அமைப்பாகும். புலிகளால் முன்னெடுக்கப்பட்ட தாக்குதல்களால் சிங்கள சமூகம் அவர்களின் உறவுகளை இழந்திருக்கின்றது. அதன்காரணமாக புலிகள் இயக்கம் தொடர்பில் சிங்கள சமூகம் வைராக்கியத்துடனேயே இருக்கிறது.

இவ்வாறானதொரு பின்னணியில் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் ஒருவரை நினைவுகூர்ந்து, புலிகளால் பாதிக்கப்பட்ட கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் குடியிருப்பை ஊடுறுத்து வாகனப் பேரணியாக பயணித்தமை மக்கள் மத்தியில் இனவாதத்தைத் தூண்டும் வகையிலான சூழ்ச்சியான செயற்பாடாகும். 2007, 56 இலக்க அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாட்டு ஒப்பந்தச் சட்டத்தின் 03ஆவது உறுப்புரைக்கமைய இனவாதத்தைத் தூண்டும் வகையிலான செயற்பாடுகளும் மக்களை தூண்டிவிடும் செயற்பாடுகளும் தண்டனைக்குரிய செயற்பாடாக கருதப்படுகின்றது. அதுமாத்திரமல்லாமல் அது பாரதூரமான குற்றமாக கருதப்படுகின்றமையின் காரணமாகவே அவ்வாறான குற்றங்களை செய்பவர்களுக்கு பிணை வழங்குவதற்கு நீதவான் ஒருவருக்கு அதிகாரம் இல்லை.

செல்வராசா கஜேந்திரன் ஒருபுறம் அரசியலமைப்பை மீறியுள்ளதுடன், மறபுறம் அரசியல் குடியியல் உரிமைகள் ஏற்பாட்டை மீறி செயற்பட்டுள்ளார். இவ்விரு காரணங்களையும் அடிப்படையாகக்கொண்டு உடனடியாக அவரை கைதுசெய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால், இதுதொடர்பில் தமக்கு இதுவரையில் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை என்று அரசாங்கம் கூறுவதாக எங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவ்வாறெனில் நாளையே பொலிஸுக்கு சென்று முறைப்பாடு செய்யவுள்ளோம் - என்றார்.

# நான்காவது நாளாகவும் சுழற்சிப் போராட்டம்

வாழைச்சேனை செய்தியாளர்



மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல்தரை கால்நடை வளர்ப்பாளர்களின் சுழற்சி முறையிலான போராட்டம் கொட்டும் மழையிலும் நான்காவது நாளாக நேற்றும் (18) முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இன்றைய தினம் போராட்டக் களத்திற்கு விஜயம் மேற்கொண்டதுடன், கால்நடை வளர்ப்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

இதன்போது மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு குறித்த விடயம் தொடர்பில் தற்போதைக்கு முன்னெடுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி கால்நடை வளர்ப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தினார்.


## பெயர் மாற்றம்

இல. 9 கதுருவங்க வேஉட என்ற முகவரியைக்கொண்ட சிசிர குமாரகே திநு ஹங்சிகா செவ்வந்தி என்ற பெயரையும் எனது தேசிய அடையாள அட்டையான 200281904574 Vஎன்ற இலக்கத்தையும் உடைய நான் 26-08-2023 ஆம் திகதிமுதல் புனித இஸ்லாத்தை ஏற்றதால் எனது பெயரை Fபஸ்லா என மாற்றியுள்ளேன். இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் சார்பில் பொதுஜன மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

Fபஸ்லா

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023 செப்டெம்பர் 19ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# தமிழர்களின் கண்ணீர் தேசம் இது!

தமிழர்களின் அறவழி தியாகியான திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப் பவனியை நேற்றுமுன்தினம் (17) திருகோணமலையில் வைத்து இடைமறித்த ஒரு குழுவினர், அதன்மீது மோசமான தாக்குதலை மேற்கொண்ட சம்பவம் தமிழர்களுக்கும் முற்போக்கு சிந்தனைகொண்டோருக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தியாகி திலீபனின் 36ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு பொத்துவிலிலிருந்து நல்லூர் வரை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ஊர்திப் பவனி 03ஆம் நாளாக நேற்றுமுன்தினம் திருகோணமலை நோக்கி பயணித்தபோது கப்பல்துறைமுகப் பகுதியில் வைத்து இலங்கையின் தேசியக் கொடியை தாங்கிய ஒரு குழுவினர் தாக்குதலை மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலை இலங்கையின் உளவுத்துறையினரே திட்டமிட்டதாகவும், மயிரிழையில் தாம் உயிர் தப்பியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

தியாகி திலீபன், தமிழ் மக்களின் உரிமைக்காக காந்தியை விஞ்சிய வகையில் அஹிம்சை வழியில் போராடிய போராளியாவார். அவரின் தியாகங்கள் என்றென்றும் அனைவராலும் மதிக்கப்படுவதுடன், சர்வதேசத்தால் அவரது தியாகம் வியந்து பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான பெருமைமிக்க பெருந்தகையின் திருவுருவப் படத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட இனவெறித் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்பதற்கப்பால் தமிழர்களின் நினைவேந்தல் உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளதை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது.

மேலும், இவ்வூர்தியில் சென்றுகொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் அவருடன் பயணித்தவர்கள் மீதான தாக்குதல்கள் பாராளுமன்ற சிறப்புரிமைகொண்ட, தமிழ் உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

ஜெனீவா அமர்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சமநேரத்தில், தமிழர்களையும், அவர்களது போரியல் நியாயத்தையும், இனத்துக்காக நிகழ்த்தப்பட்ட தியாகத்தையும் காலில் போட்டு மிதித்து, தங்களது அடக்குமுறை மனோபாவத்தை சிங்கக்கொடிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ள சிங்களக் காடையர்களது செயல் கடும் கண்டனத்துக்குரியது. தமிழர்களது உணர்வுநிலைகள் குறித்தும், அவர்களது சுயாதீன உரித்துகள் குறித்தும் எப்போதும் கள்ளமௌனம் காக்கும் ஆட்சி அதிகாரபீடங்கள், இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்பதில் எந்தவித நம்பிக்கையுமில்லை.

ஆனால், ஒரு சுதேசிய இனத்தின் அடிப்படை உணர்வு நிலைகளை வலிந்து சீண்டி, இரு இனங்களுக்கும் இடையிலான முரண்நிலைகளை மீண்டும் மீண்டும் கொதிநிலைக்குத் தள்ளி அரசியல் இலாபம் ஈட்டும் சக்திகள் இனங்காணப்படவேண்டியது காலத்தின் தேவை. ஈழத்தமிழர்களது தன்னாட்சிக் கோரிக்கை நியாயபூர்வமானது என்ற செய்தியை சர்வதேச சமூகத்தின் செவிகளில் அறைகூவல் செய்வதற்கு இந்தச் சம்பவம் ஒரு சாட்சியமாக அமைந்திருக்கிறது என்று இந்தச் சம்பவம் தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் கருத்தில் நியாயம் இருக்கிறது. இதன் விளைவென்பது, எமது மக்களிடத்தே இனம் குறித்த ஓர்மத்தை தணியாது தகிக்கச் செய்துகொண்டே இருக்கும் என்பதை சிங்களவர்களும் உணரும் காலமொன்று உருவாகியே தீரும் என அவர் சுட்டிக்காட்டுகிறார். அதுதான் யதார்த்தம்.

திலீபன் நினைவு தினப் பேரணி படங்களை அத்தனை பெரிய பொல்லைக்கொண்டு அடித்து உடைக்கிறார்கள். நல்லிணக்கம் கொண்ட ஆட்கள் நாங்கள் என்று ஜெனீவாவில் ரணில் அரசாங்கம் கூறிய அண்டப்புளுகின் இலட்சணம் வெட்டவெளியில் தெரிந்தது. அதுவும் தமிழர் தாயக தலைநகரில்.

சாதாரண ஒரு நினைவேந்தலைக் கூட அனுஷ்டிக்க முடியாத நாடு... அத்துமீறல்களைக் கண்டும் காணாத பொலிஸ்... பின்னால் இருந்து இயக்கும் அரச இயந்திரம்..

இந்த தேசம் உருப்படும் நாள் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரியும் வாய்ப்பே இல்லை. வாய்ப்பும் வராது. தமிழர்களின் கண்ணீர் தேசம் இது. அந்தக் கண்ணீரும் அவர்களின் சாபங்களுமே நாட்டை மென்மேலும் பின்னோக்கி இழுத்துச் செல்கின்றன. இந்த நிலைமை தொடரும்வரை, தமிழர்களை சக மனிதர்களாகவே மதிக்காதவரை இதுதான் தொடர்கதையாக இருக்கப்போகிறது.

## இன்றைய நாளில்...

* 1658 – யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க மத குருமாரை மறைத்து வைத்திருப்பது மரணதண் டனைக்குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.
* 1893 – உலகின் முதலாவது நாடாக நியூசிலாந்தில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.
* 1893 – சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ்பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.
* 1957 – அமெரிக்கா நிலத்துக்கடியே தனது முதலாவது அணுகுண்டு சோதனையை நடத்தியது.
* 1985 – மெக்சிக்கோ நகரில் இடம்பெற்ற 7.8 ரிச்டர் நிலநடுக்கத்தால் குறைந்தது 9,000 பேர் உயிரிழந்தனர்.
* 2014 – இலங்கையின் வடக்கே வேலணையில் நான்கு இடங்களில் மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டன.

# மகிழ்வித்து மகிழ்வோம்!

பவித்ரா நந்தகுமார்



இன்று பெரும்பாலான பணிகள் இலக்கு நிர்ணயித்து செய்யும் பணியாக மாறிவிட்டன. எடுத்துக்கொண்ட இலக்கை அடைய ஒவ்வொருவரும் பறக்கவேண்டிய நிலை. இன்றைய அவசர உலகில் எவ்வளவுதான் துடிப்புடன் செயற்பட்டாலும் ஏதோ ஒரு புள்ளியில் ஒரு வெறுமை குடியேறிவிடுகிறது.

அதை நம்மிடமிருந்து விரட்ட மகிழ்ச்சியான மக்கள் தேவைப்படுகிறார்கள். மகிழ்வான மனிதர்கள் தத்தளித்துக்கொண்டிருக்கும் நம் மனதுக்கு ஒரு துடுப்பாக இருந்து நம்மை மீட்டெடுத்துக்கொள்ள உதவுகிறார்கள்.

மகிழ்ச்சியான முகத்துடன் இருப்பவர்களையே வெற்றி சென்று சேர்கிறது என்கிறார்கள். வெற்றிக்குப் பல காரணங்கள் உள்ளன என்றாலும் நான் மகிழ்வாக வாழ்கிறேன் என்று மனப்பூர்வமாக நம்புபவர்களுக்கு அப்படியே நடப்பதாகக் கூறுகிறார்கள். மகிழ்வாக இருப்பதற்கு மலையைப் புரட்டுவது போன்ற பிரம்ம பிரயத்தனம் எதுவும் தேவையில்லை. நாம் வாழும் வாழ்க்கை சூழலையே அப்படி மாற்றிக்கொள்ள முடியும்.

என் உறவினர் ஒருவர், தன் நண்பர்கள், உறவினர் களின் சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும்போது அவர்களுக்கு அந்த நேரத்தில் என்ன தேவையோ, அதையே பரிசாக அளிப்பார். அதற்காக அவர்களின் விருப்பு வெறுப்பை அறிந்து அவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பரிசளித்து வாழ்த்துவார்.

அதனாலேயே உறவினர்கள், நண்பர்கள் வட்டத்தில் அவர் மீதான மதிப்பு கூடிக்கொண்டே போனது. 'மகிழ்வித்து மகிழ்' என்ற மேன்மையான வார்த்தைகளுக்கு உயிர்ப்பூட்டுபவர்களே இன்றைய வாழ்க்கைக்குத் தேவை.

நாம் எப்பொழுது பிறரை மகிழ்விக்க முடியும்? நாம் மகிழ்ச்சியாக இருந்தால்தான் பிறரையும் அந்த நிலைக்கு அழைத்துச் செல்ல முடியும். இன்று பலரும் தனக்கு ஏதோ ஒன்று மிகப்பெரிய அளவில் நடந்தால்தான் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்கிற தவறான நிலைப்பாட்டில் இருக்கிறார்கள்.

வீடு கட்டினால் மகிழ்ச்சி, பணத்தை அதிகம் சேர்த்து வைத்தால், காதலில் விழுந்தால், குழந்தைகளுடன் விளையாடினால், அதிகம் வாசித்தால், உடல் எடை குறைந்தால் இப்படி ஏதோ ஒன்று தனக்கு நிகழ்ந்தால்தான் மகிழ்ச்சி என்ற மனநிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால், உண்மையில் அந்த எண்ணம் தவறு. மகிழ்ச்சியாக இருப்பதும் வாழ்வதும் ஒரு கலை. சிலரைப் பற்றிக் கேட்டிருப்போம். அவர் இருந்தாலே கூட்டம் களைகட்டும் என்பார்கள். அவர் பேசினாலே அனைவர் மனமும் இன்பத்தில் பொங்கும் என்பார்கள். தாம் மகிழ்வாக இருப்பதும் பிறரை மகிழ்விப்பதும் ஒரு சிறந்த பண்பு.

அப்படி வாழ்வதை சிறந்த அறம் என்கிறார் திருவள்ளுவர்.

முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

அதாவது முகம் மகிழ்ந்து, உள்ளத்திலிருந்து இனிமையான சொற்களைப் பேசுவதே சிறந்த அறம் என்கிறார்.

மகிழ்ச்சியாக இருப்பது திடீரென ஒரு நாளில் நடந்துவிடுவதல்ல. அதனை அடையவும் மேம்படுத்தவும் பயிற்சிசெய்ய வேண்டும் என்கிறார் யேல் பல்கலைக்கழகத்தில் மிகவும் பிரபலமான உளவியல் மற்றும் நல்வாழ்க்கை பாடம் நடத்தும் பேராசிரியர் லரி சாண்டோஸ். நம்மிடமிருந்து தொலைந்துபோன மகிழ்ச்சியை மீட்டெடுக்கவும் பயிற்சி அவசியம் என்கிறார் அவர்.

இசைக் கலைஞர்கள், தடகள வீரர்கள் தொடர்ந்து பயிற்சியெடுத்து தங்களை மேம்படுத்தி வெற்றியடைவதுபோல் மகிழ்ச்சிக்கான பயிற்சிகளாக ஐந்து வழிகளையும் அவர் தெரிவிக்கிறார்.

முதலாவது, நம் வாழ்வை மாற்றிய நல்ல மனிதர்களுக்கு நன்றி உள்ளவர்களாக இருப்பது. இரண்டாவது, இரவில் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் தூக்கம். (அப்படி தினமும் தூங்குவது சவால் நிறைந்தது என்றாலும் அதிகமாக தூங்குவது அழுத்தங்களிலிருந்தும் நாம் அனுபவிக்கும் துன்பங்களிலிருந்தும் நம்மை மீட்க உதவும் என்கிறார்). மூன்றாவதாக, மன்னிக்க கற்றுக்கொள்வது. நமக்கு ஒருவர் தீமை செய்தாலும் நாம் அவர்களை பழி தீர்க்க முயலாமல் மன்னித்துவிடுவது.

ஆங்கிலக் கவிஞர் வில்லியம் பிளேக் எழுதிய 'எ பொய்சன் ட்ரீ' கவிதையில் நண்பனை மன்னிப்பதால் மனதில் வஞ்சம் மறைவதாகவும், எதிரியை அவ்வாறு மன்னிக்காது போவதால் மனதில் கொடிய நச்சு மரம் வளர்ந்து அது கொடுமையான நஞ்சு பொதிந்த அப்பிளை விளைவிப்பதாகவும் உருவகப்படுத்தியிருப்பார்.

அப்படி மனதிலிருந்து விளைந்த நஞ்சு பொருந்திய அப்பிளைப் பறித்து உண்ணும் எதிரி இறந்துவிடுவதாக முடித்திருப்பார். பழிவாங்குதல், மனதில் வஞ்சம் வைத்தல் போன்றவை நம் மகிழ்ச்சியை தொலைப்பதற்கான காரணிகள் என்பதை அழகாக அந்தக் கவிதையில் விளக்கியிருப்பார்.

நான்காவதாக, நாம் விரும்புகிற மக்களோடு நேரத்தை செலவு செய்யவேண்டும். குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் நல்ல முறையில் நேரம் செலவிடுவது உளவியல் ரீதியாக நம்வாழ்வை மேம்படுத்தும் என்கிறார். ஐந்தாவதாக, குறைவான அளவில் சமூக ஊடகங்களையும் அதிகளவில் உயிர்ப்பான தொடர்புகளையும் வைத்துக்கொள்ள வேண்டும்.

இவையே நம் மகிழ்ச்சியை மீட்கும் ஐந்து வழிமுறைகள் என அவர் தெரிவிக்கிறார். இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோர் அவற்றைப் பயன்படுத்தாதோரை விட மகிழ்ச்சி குறைந்தவர்களாக இருப்பதாக சமீபத்திய ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. யேல் பல்கலைக்கழக மாணவர்களிடம் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது எனும்போது அனைவருக்கும் இது நிச்சயம் உதவும் என்கிறார்.

பிற நாட்டு அறிஞர்கள் சொல்வது இருக்கட்டும். நம் முன்னோர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? மகிழ்ச்சி எப்பொழுதும் நம் வாழ்வில் இருக்க வேண்டுமானால் ஒரு சூத்திரத்தை கைக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதுதான் தர்மம் செய்வது. அதிகமாக தருபவர்கள் சிறப்பானதை வாழ்வில் பெறுவார்கள்.

பணத்தைக்கொண்டு மட்டுமே பிறரை மகிழவைக்க முடியும் என்பதல்ல. நம்முடைய சிறு புன்னகை சிலரது சிறகை விரிக்கலாம்; சிறிய அரவணைப்பு ஒருவர் வாட்டத்தைப் போக்கலாம்; நம் பிரார்த்தனை சிலரின் சிக்கலைத் தீர்க்கலாம். பிறருக்காக நாம் ஒதுக்கும் சில நிமிட நேரம் அவர்களுக்குப் பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.

எழுத்தாளர் தி. ஜானகிராமன் எழுதிய சிலிர்ப்பு சிறுகதை, கொடுப்பதைப் பற்றி பேசும் கருப்பொருளைக்கொண்டது. அந்தக் கதையில், உறவினர் வீட்டில் சில காலம் தங்கியிருந்த தன் மகனை அப்பா ரயிலில் அழைத்து வருவார். அதே ரயிலில் வீட்டு வேலைக்காக ஒரு சிறுமியை அழைத்துக்கொண்டு சிலர் வருவார்கள்.

இந்தச் சிறுவன் ரயிலில் ஆரஞ்சு பழம் ஒன்றை அடம்பிடித்து வாங்குவான். அந்த ஆரஞ்சு பழத்தை அம்மாவிடம் சொல்லி உரித்துக்கொடுக்கச் சொல்லப்போகிறேன் என்று யாரிடமும் கொடுக்காமல் பத்திரமாக தன்னுடனே வைத்துக்கொள்வான்.

அம்மாவின் மீது இத்தனை ஏக்கமாக இருக்கிறானே என நினைத்துக்கொண்டு வருவார் அந்த தந்தை. வழியில் அந்தச் சிறுமி ஒரு நீதிபதியின் வீட்டுக்கு வேலைக்குச் செல்லும் தனது கதையை சொல்லிக்கொண்டே வருவாள். தந்தையும் மகனும் கேட்டுக்கொண்டே வருவார்கள்.

இறுதியில் அந்தச் சிறுமி இறங்கும் நிறுத்தம் வந்ததும் சிறுவன் ஓடிச்சென்று தான் ஆசையாக வைத்திருந்த அந்த ஆரஞ்சு பழத்தை எடுத்துக் கொடுத்து நீ சாப்பிடுக்கா என்று கூறுவான். அதை பார்த்து தன் மகனை கட்டித் தழுவும்போது அந்த சச்சிதானந்தத்தையே கட்டித் தழுவுவதாக ஒரு சிலிர்ப்பு எழுந்தது என்று அந்த தந்தை நெக்குருகுவார்.

நாம் குழந்தைகளுக்கு ஒன்றைத் தருவதே மகிழ்ச்சி எனும்போது அந்தக் குழந்தை அதை தானமாக பிறருக்குத் தருவதைப் பார்ப்பது பேரானந்தத்தை தருகிறது என்பதாக கதை நிறைவு பெறும்.

இறைவன் படைப்புகளிலேயே எது உயர்ந்தது என்று சொல்லும் நாட்டுப்புறக் கதை ஒன்று. இந்த உலகத்தைப் படைத்த இறைவன் அதை நிலைப்படுத்த ஆங்காங்கே மலைகளையும் படைத்தாராம். பக்கத்திலிருந்த ஞானி, இறைவனே உங்கள் படைப்பிலேயே இந்த மலைகள்தான் உயர்ந்ததா எனக் கேட்கிறார்.

அதற்கு இறைவன் இந்த மலைகளையே பெயர்த்து எடுக்கக்கூடிய உளிகளை நான்தானே படைத்தேன் என்கிறார். அப்படியென்றால் இரும்புதான் உயர்ந்ததா என்ற அடுத்த கேள்விக்கு இரும்பையே உருக்கும் நெருப்பையும் படைத்திருக்கிறேனே என்றாராம்.

சரி, இப்போது நெருப்புதான் பெரிதா என்ற கேள்விக்கு நெருப்பை அணைக்கக்கூடிய நீரை நான்தானே படைத்திருக்கிறேன் என்றாராம். அப்போது நீர்தான் பெரியதா என்ற கேள்விக்கு நீரின் போக்கையே மாற்றக்கூடிய காற்றை நான்தானே படைத்தேன் என்றாராம்.

இறுதியாக உங்கள் படைப்புகளிலேயே எது சுவாமி பெரியது என்று கேட்டாராம் அந்த ஞானி. அதற்கு இறைவன், எவன் ஒருவன் தன் வலது கை கொடுப்பதை இடது கைக்குத் தெரியாமல் கொடுக்கிறானோ அவனே என் படைப்புகளிலேயே உயர்ந்தவன் என்றாராம்.

இந்தச் சமூகத்துக்கு ஒன்றைத் தருவதன் மூலமாக மகிழ்ச்சியை நம்முள் தக்க வைத்துக்கொள்ள முடியும். இந்த மானுடக் குழுவை மீட்க வேண்டும், காக்க வேண்டும் என்றால் அது தருவதன் மூலமாகத்தான் நிகழும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த உலகத்துக்கு நம்மால் ஒன்றைக் கொடுக்க முடியும்போது கிடைக்கும் மகிழ்ச்சி கடலை விட மிகப் பெரிது என பலரும் கூறியிருக்கிறார்கள். நாம் அனைவரும் அவரவருக்கு இயன்றதை கொடுத்துத்தான் பார்ப்போமே!

## நக்கல் நமசிவாயம்

கிரிக்கெட் மெட்ச் தோற்ற கோபத்தில.. அதுவும் இந்தியாவோட படுதோல்வி அடைஞ்ச கோபத்திலதான் திருகோணமலையில ஊர்வலத்த காக்கியிருக்கிறாங்க போல...



# கொரிய அமைச்சருக்கும் சபாநாயகருக்குமிடையில் சந்திப்பு





கொரிய குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் லீ ஜங்-ஸிக் (Lee Jung-sik) தலைமையிலான தூதுக்குழுவினருக்கும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மற்றும் கொரியாவின் இலங்கைக்கான தூதுவர் மியோன் லீ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கொரிய குடியரசின் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் லீ ஜங்-ஸிக் குறிப்பிடுகையில், தற்போதைய பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களுக்கமைய கொரிய வேலைவாய்ப்பு அனுமதி முறையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் அதன் மூலம் இலங்கைத் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டை அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

விசேடமாக இந்த மறுசீரமைப்பின் ஊடாக இலங்கைக்கான வாய்ப்புகளைப் பல்வேறு கைத்தொழில் துறைகளுக்கும் விசேட சேவைத் துறைக்கும் விரிவுபடுத்த தான் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையர்களுக்கு கொரிய மொழியை கற்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்த கொரிய வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (KOICA) உட்பட கொரியாவின் ஏனைய ஒத்துழைப்பு வேலைத்திட்டங்களை மேலும் தொடர்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

கொரியாவிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களால் இலங்கைப் பொருளாதாரத்துக்கு அதிகளவு பலனளிப்பதாகவும், இலங்கைப் பணியாளர்களுக்குப் பல்வேறு வேலைவாய்ப்புத் துறைகளில் பணியாற்றுவதற்கு அதிக சந்தர்ப்பம் வழங்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதன்போது தெரிவித்தார். அத்துடன், கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் இலங்கைக்குத் தொடர்ந்தும் வழங்கிவரும் உதவிகளுக்கு சபாநாயகர் இதன்போது நன்றி தெரிவித்தார்.

# திலீபனின் ஊர்தியை சேதப்படுத்தி கஜேந்திரன் எம்.பியை தாக்கியதைக் கண்டித்து புதுக்குடியிருப்பில் போராட்டம்







தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீதும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் திருகோணமலையில் தாக்குதல் நடத்தப்பட்டமையைக் கண்டித்தும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, தேவிபுரம் பகுதியில் நேற்று (18) கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டிருந்தது.

தாயக மற்றும் புலம்பெயர் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் தேவிபுரம், வள்ளிபுனம் கிராம மக்கள் முதன்மை வீதியில் ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், கையில் கண்டன வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை தாங்கியவாறு, எதிர்ப்புக் கோஷங்களை வெளிப் படுத்தி வள்ளிபுனம் சந்தி வரை சென்று அங்கு கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந் தார்கள்.

தியாக தீபம் திலீபனின் நினைவு ஊர்தி மீது மாத்திரமல்ல, பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தியமை கண்டனத்துக்குரியதாகும் என்றும் இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் வலியுறுத்தி இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

''திருகோணமலைத் தமிழரின் தலைநகர் தியாகி திலீபன் அஹிம்சையின் அடையாளம்'', ''தமிழ் மக்கள் தமது தாயக மண்ணில் இறந்தவர்களை வழிபடத் தடைதானா?'', ''போராடுவோம் போராடுவோம்!! தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுவோம்'', ''ஐ.நா. சபையே ! தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?'', ''வடக்கு, கிழக்கு தமிழரின் தாயக பூமி.'' ''நிறுத்து நிறுத்து! அடாவடியை நிறுத்து !!'' - போன்ற பல்வேறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து குயில்வத்தையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்



மனுர சுதத் செல்லஹேவா

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதி, குயில்வத்தை பிரதேசத்தில் புதிதாக மதுபான சாலையொன்றைத் திறப்பதற்கான திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சிலர் நேற்று (18) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசியல் தலையீட்டுடன் குறித்த இடத்தில் வர்த்தகரொருவரினால் மதுபானசாலையை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இந்த இடத்தில் அவ்வாறு மதுபானசாலையை திறந்தால் தமது குழந்தைகள் மது பாவனைக்கு அடிமையாவதற்கான ஆபத்து நிலை இருப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.



அதன் காரணமாகவே இந்த இடத்தில் இவ்வாறு புதிய மதுபானசாலையை ஆரம்பிப்பதற்கு தாம் இவ்வாறு எதிர்ப்பு தெரிவிப்பதாகவும் அதே இடத்தில் இந்தத் திட்டத்துக்கு எதிராக மக்களிடம் கையொப்பம் பெற்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

# பொலிஸ் கான்ஸ்டபிள் மீது கத்திக்குத்து

பம்பலப்பிட்டி, பொன்சேகா வீதியிலுள்ள புதுக்கடை 06ஆம் இலக்க நீதவான் நீதிமன்ற நீதவானின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கருகில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை, நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயம் ஏற்படுத்தியுள்ளதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார்சைக்கிளில் வந்த இருவர், குறித்த இல்லத்துக்கருகில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனமொன்றின் கண்ணாடியை உடைத்துக் கொண்டிருந்துள்ளனர். அந்தச் சத்தத்தைக் கேட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் அவ்விடத்துக்குச் சென்றுள்ளார். கான்ஸ்டபிளை கண்டதும் அங்கிருந்து தப்பித்துச் செல்ல சந்தேகநபர்கள் முயற்சித்துள்ளதுடன், அவர்களில் ஒருவர் பொலிஸ் கான்ஸ்டபிளை கூரிய ஆயுதத்தால் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தத் தாக்குதலால் கான்ஸ்டபிளின் வலது கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்க விண்ணப்பம் கோரல்

மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோருவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

கணக்காய்வுக்குட்படும் நிறுவனமொன்றின் பிரதான கணக் கீட்டு அலுவரினால் செய்யப்பட்ட ஒரு தீர்மானம் மூலம் இன்னலுறும் எவரேனும் அத்தகைய தீர்மானத்துக்கு எதிராக மேன் முறையீடு செய்யக்கூடிய குழு 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படவுள்ள மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழுவாகும்.

அதற்கமைய, கணக்காய்வு, சட்டம் மற்றும் அரசாங்க நிதி முகாமைத்துவம், பொது நிர்வாகம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளில் அனுபவமுடையவர்களுக்கு இதற்கு விண்ணப்பிக்க முடியும். தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் இலங்கை அரச கணக்காய்வுச் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

இதற்கான விண்ணப்பங்கள் constitutionalcouncil@parliament.lk எனும் பாராளுமன்ற இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023 ஒக்டோபர் 09 அன்று அல்லது அதற்கு முன்னர் அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

அதுடன், கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலாயின் அதன் விடயமாக, 'அரசியலமைப்புப் பேரவை: மிகைக்கட்டண மேன்முறையீட்டுக் குழு' எனக் குறிப்பிடவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கால்நடைகள் இல்லாது பால் உற்பத்தியாளர்கள் பலத்த சவாலுக்கு முகம்கொடுக்க நேரிடல்

## மத்திய மாகாண ஆளுநர் தெரிவிப்பு



கண்டி நிருபர்

இலங்கையில் பால் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் மத்திய மாகாணத்தில் போதியளவு கால்நடை உற்பத்தி மற்றும் மிருக வைத்திய அதிகாரிகள் இல்லாத காரணத்தால் மத்திய மாகாண பால் உற்பத்தியாளர்கள் பாரிய சவாலுக்கு உட்பட்டுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

மேற்படி விடயம் தொடர்பாக நுவரெலியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாக அவர் கண்டியில் வைத்து சனிக்கிழமை (16)தெரிவித்தார். எனவே, பால் உற்பத்தியை கடந்த காலங்களைப் போல் பேணிக் கொள்வதில் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் கால்நடை வைத்தியர்களுக்கான இடமாற்றத்திட்டம் ஒன்றை அமைத்துக்கொள்ள முடியாதிருப்பதாகவும் இதுபோன்ற பல்வேறு காரணங்களால் பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இது விடயமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையக மக்களின் காணி, வீட்டுரிமை ஆய்வறிக்கை வெளியீடும், கருத்துரையும்

ஆ.ரமேஸ்

இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்யவென 1823ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து அழைத்துவரப்பட்டு மலையகத்தில் குடியமர்த்தப்பட்டு இந்திய வம்சாவளிகளாக வாழும் மக்கள் 200 வருடகால வரலாற்றைக்கொண்டுள்ளனர். இவர்கள் குறித்த ஆய்வறிக்கை வெளியீடும் கருத்துரையும் நிகழ்த்தப்படவுள்ளன.

இந்த மக்கள் மலையகத்தில் கால் பதித்து இப்போது 200 வருடங்களாகின்ற நிலையில், காணி மற்றும் வீட்டுரிமையில் முழுமைபெறாத சமூகமாக - உழைத்து வாழும் மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களாகவே பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்களின் வாழ்வியல் தொடர்பாக 200 வருட வரலாற்றை பல்வேறு தரப்பினரும் பல வடிவங்களில் வெளிக்கொணர்ந்துள்ளனர். அந்தவகையில் 200 வருட காலத்தில் காணி உரிமை மற்றும் வீட்டுரிமையற்று வாழும் இம் மலையக மக்களின் ஆய்வறிக்கை வெளியீடும், கருத்தாடலுமொன்றால் அமைப்பின் பரிந்துரைக்கமைய எதிர்வரும் வியாழக்கிழமை (21) கொழும்பு - 07 சுதந்திர அவனியு, தேசிய பொது நூலக மண்டபத்தில் பிற்பகல் 02 மணியளவில் இடம்பெறவுள்ளன.

இதில் பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இரா.ரமேஷ் எழுதிய மலையக மக்களின் காணி மற்றும் வீட்டுரிமை தொடர்பான ஆய்வு நூல் வெளியீடும் கருத்துப் பகிர்வும் இடம்பெறவுள்ளன.

இந்த விசேட நிகழ்வில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.வாமதேவன், அபிவிருத்தி ஆலோசகர் திருமதி கலைமகள் தங்கவேல், சிரேஷ்ட விரிவுரையாளர் இரா.ரமேஷ் மற்றும் மொனரால் அமைப்பின் நெறியாள்கையாளர் சிந்தக ராஜபக்ஷ ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இராணுவத்தினரால் இரண்டு உழவு இயந்திரங்கள் பறிமுதல்

## பொலிஸாரிடம் ஒப்படைப்பு



பு.கஜிந்தன்

இராணுவத்தினரால் இரண்டு உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி, தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக இராணுவத்தினருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் (17) சுற்றிவளைக் கப்பட்டது.

இதன்போது அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதன்போது சாரதிகளும் கைதுசெய்யப்பட்டு தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (18.09.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.8633 | 213.7303 |
| கனேடியன் டொலர் | 233.3029 | 244.8381 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.8063 | 45.7547 |
| யூரோ | 337.1925 | 352.8325 |
| ஜப்பான் யென் | 2.1417 | 2.2385 |
| சிங்கப்பூர் டொலர் | 231.7443 | 242.7446 |
| ஸ்ரேலிங் பவுன் | 392.4038 | 409.2155 |
| சுவிஸ் பிரான்ங் | 351.4247 | 369.2049 |
| ஐ.அ. டொலர் | 317.6039 | 328.8363 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 858.6697 |
| குவைட் | குவைட் தினார் | 1,046.8937 |
| ஓமான் | ஓமான் றியால் | 839.9678 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.1972 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.2218 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.0411 |

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.09.17
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5240
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 26,864,432.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 8 4 9 8 4 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3482
சீட்டிழுப்பு திகதி 2023.09.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,929,159.60
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 01 48 71 78
விசேட எழுத்து M
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 04334

Lucky 7
திகதி 17.09.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0066
வெற்றி இலக்கினம் துலாம்
L7 இலக்கம் 0 5
வெற்றி இலக்கங்கள் 1 0 0 0 4 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,931,872.48

தன நிதானய
தேதி 2023/09/17
சீட்டிழுப்பு இலக்கம் 1270
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 110,560,426.40
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 32 33 49 72
விஷேசட ஆங்கில எழுத்து A
Double Chance இலக்கம் 03775

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்
சீட்டிழுப்பு திகதி 2023-09-17
549
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,000,000.00
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 10 24 41 47
விசேட இலக்கினம் கும்பம்

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1588
17/09/2023
14478
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,087,536.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து R
சுப்பர் இலக்கம் 21
வெற்றி இலக்கங்கள் 03 13 50 73

# மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவு - தொழிற்சங்கப் பிரிவில் அதிரடி மாற்றம்




ஆ.ரமேஸ், மஸ்கெலியா நிருபர்

மலையக மக்கள் முன்னணி மற்றும் அதன் தொழிற்சங்கப் பிரிவான மலையகத் தொழிலாளர் முன்னணியில் மறுசீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக முன்னணியில் இதுவரை இருந்துவந்த நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள் அதிரடியாக மாற்றம் செய்யப்பட்டு புதிய நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் கவுன்சில் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணியின் ஹட்டன் தலைமைக் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (17) குறித்த நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு, முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மலையக மக்கள் முன்னணி மற்றும் அதன் தொழிற்சங்கமான மலையகத் தொழிலாளர் முன்னணியின் தலைவராக வேலுசாமி இராதாகிருஷ்ணன் தொடர்ந்தும் இருப்பார். இந்நிலையில், கட்சியின் கவுன்சில் உறுப்பினர்களாக ஆர்.ராஜாராம், கண்மணி சிவனேசன், ஆனந்தன், தாளமுத்து தா.சுதாகரன், க.சிவஞானம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, முன்னணியின் செயலாளர் நாயகமாக பேராசிரியர் எஸ்.விஜயசந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் பிரதித் தலைவராக முன்னாள் மத்தியமாகாண சபை உறுப்பினர் ஆர்.ராஜாராமும், தேசிய அமைப்பாளராக ந.பாலமுரளி மற்றும் நிதிச் செயலாளராக பி.கிருஷ்ணன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்கப் பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியிலும் பதவி மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன.

அந்தவகையில் தலைவராக கலாநிதி வே.இராதாகிருஸ்ணன், பதில் செயலாளராக புஸ்பா விஸ்வநாதன், நிதிச் செயலாளராக தாளமுத்து சுதாகரன், அமைப்புச் செயலாளராக எஸ்.ஜெயக்குமார், பிரதி பொதுச் செயலாளராக க.சிவஞானம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து மலையக மக்கள் முன்னணியின் இளைஞரணித் தலைவராக லெட்சுமனார் சஞ்சய், செயலாளராக கதிர்காமத்தம்பி சுரேன், இணைப்பாளராக கலைக்குமார் நியமிக்கப் பட்டுள்ளனர்.

மகளிர் அணித் தலைவியாக சுவர்ணலதா இலங்கேஸ்வரன், செயலாளராக கிருஷ்ண வேணி, பிரதி தலைவியாக கலா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டதோடு கட்சியிலிருந்து விலகியிருந்த பத்மநாதன் மீண்டும் கட்சியில் இணைத்துக்கொள்ளப்பட்டார்.

இவ்வாறு புதிய உறுப்பினர்கள் மலையக மக்கள் முன்னணி மற்றும் தொழிற்சங்கப் பிரிவான மலையக தொழிலாளர் முன்னணியில் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வளவு காலம் கட்சியில் காணப்பட்ட பிணக்குகள் தீர்க்கப்பட்டு புதிய உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் மலையகத்தில் மலையக மக்கள் முன்னணி மக்களோடு மக்களாக இருந்ததை விட மேலும் ஒரு படி முன்னோக்கிச் செல்லும் எனவும் எந்நேரமும் மக்களுக்காக மலையக மக்கள் முன்னணியின் கதவு திறந்திருக்குமெனவும் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே.இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

# அனுமதிப்பத்திரமின்றி மாட்டிறைச்சியை ஓட்டோவில் கொண்டுசென்றவர் சிக்கினார்

சட்டவிரோதமான முறையிலும் அனுமதிப் பத்திரமின்றி ஓட்டோவில் 45 கிலோ கிராம் மாட்டிறைச்சியை சூட்சுமமாகவும் கொண்டுசென்றவர் ஆக்கரத்தன்னை விசேட அதிரடிப்படையினரிடம் வசமாகச் சிக்கியதால் அவரைக் கைதுசெய்துள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் பசறை பகுதியில் அதிகளவான பசு மாடுகள் காணாமல் போவதாக பசறை பிரதேச மக்களால் மொனராகலை பிராந்திய விசேட அதிரடிப் படையினரின் தளபதி குணசிறிக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அசோகவின் ஆலோசனைக்கமைய பசறை அக்கரத்தன்னை விசேட அதிரடிப்படையின் தளபதி ஹேமவன்ஸ தலைமையினாலான குழுவினர் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது பசறை ஹத்கம்நிவச பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் உட்பட மாட்டிறைச்சி மற்றும் முச்சக்கரவண்டியை பசறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பெரஹெராவுக்கு அழைத்துவந்த யானை தாக்கி சிறுவன் பரிதாபகரமாக உயிரிழப்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பெரஹெராவுக்கு அழைத்துவரப்பட்ட யானை அதனருகில் சென்ற சிறுவனொருவனைத் தாக்கியதில் சிறுவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய, பனாமுர பிரதேசத்தில் சனிக்கிழமை (16) இடம்பெற்ற இச்சம்பவத்தில் 12 வயதுடைய லகிந்து நெல்சன் என்ற சிறுவனே மரணமடைந்துள்ளார். குறித்த சிறுவன் எம்பிலிப்பிட்டிய அரச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சைக்குப் பின் மரண மடைந்ததாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

சில தினங்களுக்குப் பின் நடைபெறவிருந்த பெரஹெராவுக்கு அழைத்துவரப்பட்டு மரமொன்றில் கட்டப்பட்டிருந்த யானைக்கு நெருக்கமாகச் சென்றபோதே யானை சிறுவனை தாக்கியுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக விசாரணைகளை நடத்திவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# புதையல் தேடிய தேரர் உட்பட ஏழு பேர் கைது

பதுளை, மிகஸ்பிட்டிய கொஹன பகுதியில் உள்ள நீர்வீழ்ச்சிக்கருகில் புதையல் தேடியதாக தேரர் உட்பட 7 பேரை பதுளை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு கைதுசெய்யபட்டவர்களிடமிருந்து புதிய வகை டிஜிட்டல் ஸ்கேனிங் இயந்திரம் மற்றும் ஏராளமான பூஜைப் பொருட்களும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் அம்பலாங்கொட பிரதேசத்திலுள்ள விகாரை ஒன்றின் 50 வயதுடைய தேரர், கம்பஹா பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய பூசாரி, 60, 40 மற்றும் 30 வயதுடைய 4 பேருடன் மேலும் 30, 25 வயதுடைய இருவர் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது ஸ்கேன்ங் இயந்திரம், ஸ்க்ரூட்டிரைவர்கள், ஆணி கத்தரிக்கோல், 9 வோல்ட் பேட்டரிகள், மந்திர புத்தகங்கள், மண்வெட்டிகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக குணசேகரவின் ஆலோசனைக்கமைய பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் தொல்லியல் சோதனைப் பிரிவின் சார்ஜன்ட் பிரேமச்சந்திர உள்ளிட்ட குழுவினர் இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் மற்றும் உபகரணங்களை பதுளை நீதவான் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டுவருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.




**பதுளை ஹாலி-எல நகர அருள்மிகு வீரசக்தி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் கொடியேற்றத் திருவிழாவில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துகொண்டார். இத்திருவிழாவில் பூஜைகள் இடம்பெறுவதையும், கலந்துகொண்ட பக்த அடியார்களையும் படங்களில் காணலாம்.**

# தாராபுரம் பாடசாலையின் புதிய அதிபர் நியமனத்துக்கு எதிராக மக்கள் போராட்டம்




மன்னார் நகர் நிருபர்

மன்னார் வலயக்கல்விப் பணிமனைக்குட் பட்ட தாராபுரம் மன்./அல்-மினா மகா வித்தியாலயத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட அதிபருக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதேநேரம், அதிபர் தகுதியை பூர்த்திசெய்து நேர்முகத் தேர்வில் கலந்துகொண்ட தாராபுரம் கிராமத்தைச் சேர்ந்த அதிபரை நியமிக்குமாறும் கோரி அப்பகுதி மக்களால் நேற்று (18) திங்கட்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார், தாராபுரம் அல்-மினா பாடசாலைக்கு முன் பகுதியிலுள்ள வீதியில் காலை 7.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை ஊர்மக்கள் பலர் இணைந்து பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு குறித்த அதிபர் நியமனத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக, மன்./அல்-மினா பாடசாலையில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பெறுபேறுகளும் தொடர்ச்சியாக சரிவு நிலையில் காணப்படுவதாகவும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் தங்களது பதவிக் காலம் நிறைவடைந்தும் பாடசாலையின் நிர்வாகத்திலிருந்து விலகாதிருப்பதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சுமத்துகின்றார்கள்.

அதேநேரம், புதிய அதிபர் நியமனத்திலும் பதவிக்காலம் நிறைவடைந்தும் நிர்வாகத்தில் இருக்கும் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலையீடு காரணமாகவே தகுதிவாய்ந்த தங்கள் கிராமத்தைச் சேர்ந்த அதிபர் நியமிக்கப்படவில்லை எனவும் இது தொடர்பில் தாங்கள் எழுத்துமூல மகஜர் ஒன்றை உயரதிகாரிகளுக்கு கையளித்ததாகவும் குறித்த மகஜர் தொடர்பில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் போராட் டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்திருந்தனர்.

எனவே, குறித்த பிரச்சினையில் மன்னார் வலயக்கல்விப் பணிமனை மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையீடு செய்து தாராபுரம் மக்களின் விருப்பத்தின்படி தமது கிராமத்துக்கு தமது கிராமத்தைச் சேர்ந்த அதிபரை நியமிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டங்கள் எமது வளங்களை அழிப்பதாகவே காணப்படுகின்றன

## அனைத்து மக்கள் ஒன்றியத் தலைவர் பாஸ்கரன் தெரிவிப்பு

மு.தமிழ்ச்செல்வன்



கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டங்கள் எல்லாம் எமது வளங்களை அழிப்பதாகவே அமைகின்றன - என கிராஞ்சி, பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றியத் தலைவர் வல்லிபுரம் பாஸ்கரன் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் 46 ஆவது நாளாக பொன்னா வெளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சுன்னக்கல் அகழ்வுக்கு எதிரான போராட்டத்தை மேற்கொண்டுவரும் பிரதேச மக்கள் சார்பாக கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொன்னாவெளி கிராமத்தில் டோக்கியோ சீமெந்து கம்பனியால் சுன்னக்கல் அகழ்வுக்கான பூர்வாங்க வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன. இதற்கு கிராஞ்சி, பொன்னாவெளி கிராம மக்களாகிய நாம் எங்களது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து நிற்கின்றோம். அதனால்தான் 46ஆவது நாளாக நாம் தொடர்ச்சியானபோராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

எங்களது கிராமங்கள் அழிக்கப்படுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். மக்களின் நலன்களுக்கு மாறான எந்தத் திட்டத்தையும் எமது மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கொண்டுவரப்படுகின்ற திட்டங் கள் எமது வளங்களை அழிப்பதாகவே நாம் கருதுகின்றோம். கடலட்டைப் பண்ணை, சீமெந்து தொழிற்சாலைக்கான சுன்னக்கல் அகழ்வு என்பன இதற்கு உதாரணங்களாகும். இதன் காரணமாகத்தான் மக்களாகிய நாம் இதற்கு எங்களுடைய கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம்.

யுத்தம் காரணமாக இந்தப் பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து சென்றோம். மீண்டும் சொந்தப் பிரதேசங்களுக்குத் திரும்பி வந்தோம். ஆனால், சுன்னக்கல் அகழ்வு இடம்பெற்றால் நாம் எங்களது ஊர்களை விட்டு இடம்பெயர்ந்து செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அவ்வாறு இடம்பெயர்ந்தால் மீண்டும் நாம் எமது சொந்த ஊர்களுக்குத் திரும்ப முடியாது. அவ்வாறான ஒரு நிலைமையே ஏற்படும் – என்றார். எங்களின் விருப்பத்துக்கு மாறான இத்திட்டத்தை தடுத்துநிறுத்தஅக்கறையுள்ள அனைவரும் தங்களுடன் கைகோர்த்து நிற்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# திருகோணமலை சம்பவத்துக்கு கண்டனம்

## வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

பு.கஜிந்தன்



தியாக தீபம் திலீபனின் உருவப் படத்தை தாங்கிவந்த ஊர்திப் பவனி மீது திருகோணமலையில் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டனம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஊடகப் பேச்சாளர் இ.தர்ஷன் கண்டனம் தெரிவித்தார்.

இதன்போது வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங் கிணைப்பாளர் சி.ஜெல்சின், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் யோ.நெவில்குமார் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலையில் தியாக தீபம் திலீபன் ஊர்திப் பவனிமீது சிங்களக் காடையர் குழுவின் திட்டமிட்ட இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

சாதாரண எங்கள் நினைவேந்தலைக்கூட செய்யமுடியாத இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு அரசாங்கம் பொறுப்புக் கூறுவதோடு இந்தத் திட்டமிட்ட தாக்குதலை செய்யத் துண்டியவர்களுக்கும் தாக்குதலை நடத்திய காடையர்களுக்கும் உரிய தண்டனையை வழங்க வேண்டும் - எனக் குறிப்பிட்டனர்.

# யாழ். பல்கலை மாணவர் ஒன்றியத் தலைவர்

பு.கஜிந்தன்



திருகோணமலையில் தியாக தீபம் திலீபன் அண்ணாவை நினைவேந்தி அவரது உருவப் படத்தை தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது சிங்கள அடிப்படைவாதக் குழுக்களால் மேற்கொள் ளப்பட்ட தாக்குதலை மாணவர் சமூகமான நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் - என யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.

# எதிர்ப்பின் மத்தியிலும் வவுனியாவை வந்தடைந்தது தியாக தீபம் திலீபனின் ஊர்தி

வவுனியா நிருபர்

பல எதிர்ப்பின் மத்தியிலும் தியாக தீபம் திலீபனின் ஊர்தி வவுனியாவை வந்தடைந்ததாகத் தெரியவருகிறது. திருகோணமலையில் தாக்குதலுக் குள்ளான தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி நேற்று (18) அதிகாலை வவுனியாவை வந்தடைந்தது.

தியாக தீபம் திலீபனின் 36 ஆவது நினைவேந்தலை முன் னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் திலீபன் வழியில் வருகின்றோம் என்னும் ஊர்திப் பவனியானது அம்பாறை, பொத்துவில் பகுதியில் ஆரம்பித்து திருகோணமலையில் வலம்வந்திருந்தது.

இந்நிலையில், திருகோணமலை கப்பல்துறை பகுதியில் வைத்து குறித்த ஊர்தி மீது சிங்களக் காடையர்களால் நேற்று முன்தினம் (17) தாக்குதல் நடத்தப்பட்டதுடன், குறித்த ஊர்தியுடன் வந்த வாகனங்களும் சேதமாக் கப்பட்டன. அத்துடன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி காண்டீபன் உள்ளிட்ட செயற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து சேதமாக்கப்பட்ட குறித்த ஊர்தி தம்பலகாமம் பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட செயற்பாட்டாளர்களும் அங்கு தங்கியிருந்தனர். இந்நிலையில், வடக்கிலிருந்து சென்ற இளைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் துணையுடன் குறித்த ஊர்தியும் பாராளுமன்ற உறுப்பினர் உள் ளிட்ட செயற்பாட்டாளர்களும் திருகோணமலையிலிருந்து அழைத்து வரப்பட்டிருந்தனர்.

# "சிறுபான்மைச் சமூகங்கள் மீதான அடக்குமுறைகள் இன்னும் ஓயவில்லை"

## கஜேந்திரனை தாக்கியதை வன்மையாகக் கண்டிப்பதாக ரிஷாட் எம்.பி. தெரிவிப்பு



சிறுபான்மைச் சமூகங்கள் இன்னும் அடக்குமுறைக்குள் இருப்பதையே பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதான தாக்குதல் வெளிப்படுத்துகிறது. சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலை என்றால், சிறுபான்மை மக்களின் நிலை எப்படியிருக்கும்? எனவே, கஜேந்திரன் எம்.பி. மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம் - என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பேரினவாதக் கும்பலின் அட்டகாசங்களுக்கு சிறுபான்மை மக்கள் பலியாவது அல்லது அவமானப்படுத்தப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யாமல் சமூக ஐக்கியம் எங்கே வரப்போகிறது?

பொலிஸாருக்கு முன்னால் இவ்வாறான அடாவடித்தனங்கள் இடம்பெறுவது சட்டவாட்சியை கேலிக்கூத்தாக்குகின்றது. சட்டத்தின் ஆட்சியை பேரினவாதக் கும்பல் கையிலெடுக்கும் நிலைமைகள் ஒழிக்கப்படாத வரை, சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பே கிடையாது. அரசியல் உரிமைகளை உணர்வு ரீதியாக மதிக்கவும் இடமில்லாத இந்த ஆட்சியில், நாம் எந்த நம்பிக்கையில் வாழப்போகிறோம்?" - இவ்வாறு அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

# அதிபர் சேவையில் 7,000 பதவி வெற்றிடங்கள்: கிராமிய பாடசாலைகளுக்கு அதிக பாதிப்பு!

அதிபர் சேவையிலுள்ள பதவி வெற்றிடங்கள் 7,000 வரையில் அதிகரித்துள்ளதாகவும் அதிபர் சேவையிலுள்ள குறைபாட்டின் காரணமாக கிராமிய பாடசாலைகளே அதிகளவில் பாதிப்படைந்துள்ளதாகவும் அதிபர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

அதிபர் சேவையில் மாத்திரம் 16,000 பேர் வரையில் கடமையாற்ற வேண்டும் என்பதுடன், தற்போது நிலவும் அதிபர்களுக்கான குறைபாட்டின் காரணமாக கடமைப் பணிகளை ஆசிரியர்களே முன்னெடுத்து வருவதாகவும் ஒருசில பாடசாலைகளில் ஆசிரியர் சேவையில் மூன்றாம் தரத்தில் சிலர் அதிபர் சேவையுடன் தொடர்புடைய கடமைகளை புரிந்துவருவதாகவும் அந்தச் சங்கத்தின் செயலாளர் அனில் அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது,

அதிபர், பிரதி அதிபர் மற்றும் உதவி அதிபர் ஆகிய மூன்று சேவைப் பிரிவுகளிலும் பதவி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அதிபர் சேவையில் முதலாவது தரம், இரண்டாவது தரம் மற்றும் மூன்றாவது தரம் என்ற அடிப்படையில் மூன்று பிரிவுகளையும் அவதானித்தால் இந்த மூன்று பிரிவுகளில் பதவி பற்றாக்குறை நிலவுகின்றது.

இதற்கு முன்னர் இருந்த அதிபர் சேவை, அரசியலமைப்பின் பிரகாரம் ஆசிரியர் சேவையின் முதலாவது தரத்திலுள்ள ஆசிரியர்களுக்கு அதிபர் சேவைப் பிரிவின் முதலாவது தரத்துக்கு இணைந்துகொள்வதற்காக பரீட்சைக்குத் தோற்றி அதனூடாக அதிபர் சேவையின் முதலாவது பிரிவில் இணைந்துகொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இரண்டாம் தரத்திலுள்ள ஆசிரியர்கள் அதிபர் சேவையின் இரண்டாம் தரத்தில் உள்நுழைவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் அதிபர் சேவை அமைப்பின் பிரகாரம் ஆசிரியர் சேவையின் முதலாவது தரத்திலுள்ளவர்கள் அதிபர் சேவையின் மூன்றாவது தரத்துக்கு இணைத்துக்கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் பரீட்சைக்குத் தோற்றி அவர்கள் அதிபர் சேவையின் மூன்றாம் தரத்துக்கு இணைத்துக்கொள்ள முடியும்.

ஆசிரியர் சேவையின் முதலாவது தரத்திலிருந்து அதிபர் சேவையின் மூன்றாவது தரத்துக்கு இணைத்துக்கொள்ளும்போது சம்பளம் குறைவடையும் என்பதால் ஆசிரியர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது. அதனால், குறித்த உறுப்புரையை நீக்கி முன்னர் இருந்தவாறு அதிபர் சேவைக்கு ஆட்களை இணைத்துக்கொள்ள வேண்டும்.

பழைய முறைமையைப் பயன்படுத்தி ஆட்சேர்ப்பு செய்தால் அதிபர் சேவையில் முதலாவது தரம் மற்றும் இரண்டாம் தரம் என்பவற்றில் நிலவும் பதவி வெற்றிடங்களை விரைவாக நிரப்ப முடியும். தற்போதுள்ள சட்டத்திட்டங்களுக்கமைய அதிபர் சேவையின், மூன்றாம் தரத்துக்கு மட்டுமே சேவைக்கு இணைத்துக்கொள்ளும் முடியும்.

இதற்கமைய, அதிபர் சேவையின் இரண்டாம் மற்றும் முதலாம் தரங்களுக்கு இணைந்துகொள்வதற்கான அதிபர் சேவையின் மூன்றாம் தரத்துக்கானவர்கள் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

# பகிடிவதைக்கு எதிராக எடுத்த நடவடிக்கை என்ன?

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவு

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், பகிடிவதையின் அங்கமாக பெரிய ரயர் ஒன்றை கீழே தள்ளிவிட்டதில் முதலாம் ஆண்டு மாணவன் பசிந்து சில்வா தலையில் பலத்த காயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாணவனுக்கு ஏற்பட்ட காயம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணையின்போதே உயர் நீதிமன்றம் இதனை அறிவித்துள்ளது.

2020ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி ஒரு புதுமுக மாணவர்கள் வரவேற்பின் பிறகு, பல்கலைக்கழகத்தின் மூத்த மாணவர்கள் குழு ஒரு பெரிய டிராக்டர் ரயரை பல்கலைக்கழக விளையாட்டு மைதான பெவிலியனின் படிக்கட்டுகளிலிருந்து கீழே தள்ளியது.

படிக்கட்டில் ஏறிக்கொண்டிருந்த பசிந்து மீது ரயர் தாக்கியதில் முதலாம் ஆண்டு மாணவன் தலையில் பலத்த காயங்களுடன் படிக்கட்டில் சரிந்தார்.

ராகிங்கின்போது மாணவர்கள் எதிர்கொள்ளும் சம்பவங்களின் தன்மையை தெளிவுபடுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியக் குழுவுக்கும் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுபோன்ற சம்பவங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு உத்தரவிடப்பட்டது. பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றுவரும் பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒழுக்காற்று குழு சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

புதிய மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் தாக்கி சித்திரவதை செய்வதாக மனுவுடன் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதிகளில் படிக்கும் பெரும்பாலான மாணவர்கள் இத்தகைய துன்புறுத்தலுக்கு ஆளாகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மனுவில் பிரதிவாதிகள் உதவி கோரியிருப்பதால் அது தொடர்பான விடயங்களை பரிசீலிக்க கால அவகாசம் தேவைப்படுவதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் உத்தரவின்படி அறிக்கைகளை சமர்ப்பிக்க கால அவகாசம் வழங்குமாறு அவர் நீதிமன்றத்திடம் கோரினார். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், ஒக்டோபர் 11ஆம் திகதிவரை அவகாசமளித்து, வழக்கை ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென்னிந்திய இஸ்லாமிய அறிஞர் அபூதாஹிர் இலங்கை விஜயம்

பீ.எம் முக்தார்



இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹ் அலைஹிவஸல்லம் அவதரித்த இந்த புனித ரபியுனில் அவ்வல் மாதத்தில் சீனன்கோட்டையில் நடைபெறும் மீலாதுன் நபி விழா மற்றும் மௌலித் மஜ்லிஸ்களில் விசேட பேச்சாளராக கலந்துகொள்ள இந்தியா சேலம் நூருல் இஸ்லாம் அரபுக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அப்ழலுல் உலமா மௌலவி அல் ஹாஜ் அபூதாஹிர் (பாகவி) சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத்தின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்று (19) மாலை சீனன்கோட்டை குட்டிமலை ஜலாலிய்யா ஸாவியா மஸ்ஜிதில் மௌலவிகள் எம்.டபிள்யு.எம்.பஹ்ருத்தீன் (மிஸ்பாஹி) முஹம்மத் இக்ராம் (நுலாரி) ஆகியோர் தலைமையில் நடைபெறும் ஸுப்ஹான மௌலித் மஜ்லிஸ் நிகழ்வில் உரையாறறவுள்ளார்.

இவர் சீனன்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசலில் 22.09.2023 வெள்ளிக்கிழமை ஜும்ஆ பிரசங்கம் நிகழ்த்தவுள்ளார்.

சீனன்கோட்டை பிடவல ஷாதுலிய்யா ஸாவியாவில் நடைபெறும் 91ஆவது புனித புஹாரி மஜ்லிஸ், ஜாமிஅதுல் பாஸியா கலாபீடம், குட்டிமலை ஜலாலியா ஸாவியா ஜும்ஆ மஸ்ஜித், நளீம் ஹாஜியார் மாவத்த முர்ஸியா ஸாவியா, ஆகியவற்றில் நடைபெறும் மீலாதுன் நபி மௌலிதுன் நபி மஜ்லிஸ்களில் உரை நிகழ்த்தவுள்ளார்.

காலி இளைஞர் உலமா சங்கத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 22ஆம் திகதி இரவு இஷாத் தொழுகையின் பின்னர் காலி கிந்தோட்டை முஹித்தீன் ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெறும் மாபெரும் மீலாத் மார்க்கச் சொற்பொழிவிலும் பேராசிரியர் அபூதாஹிர் (பாகவி) நபிகள் நாயகத்தை புகழ்வது ஈமானின் ஒரு அம்சம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

அத்தோடு நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெறும் மீலாத் விழாக்களிலும் அவர் உரை நிகழ்த்தவுள்ளார். இவர் இப்பிரதேசத்திலுள்ள பல முக்கிய பிரமுகர்கள், அறிஞர்களையும் சந்திக்கவுள்ளார்.

# ஜே.ஆரின் கொள்கைகளைப் பின்பற்றியிருந்தால் இலங்கை இந்நேரம் அபிவிருத்தியடைந்திருக்கும்





## ஜயவர்தனவின் 117ஆவது ஜன்ம தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் விசேட செய்தி

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன, 1977ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்த சமூக, பொருளாதார கொள்கைகளை அவ்வண்ணமே முன்னோக்கிக் கொண்டு சென்றிருந்தால் இலங்கை இன்று அபிவிருத்தி அடைந்த நாடாகியிருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் 117ஆவது ஜன்ம தின நிகழ்வையொட்டி விடுத்துள்ள விசேட செய்தியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் பேரவையின் 78ஆவது அமர்வில் பங்கேற்க அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், அவர் வெளியிட்டுள்ள செய்தியை ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் பீ. மும்முல்லகே நிகழ்வில் வாசித்தார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஜே.ஆர். ஜயவர்தன இந்நாட்டில் சமூக பொருளாதாரத்தில் புரட்சியை ஏற்படுத்திய வராவார். அவர் 1977ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்த சமூக, பொருளாதார கொள்கைகளை அவ்வண்ணமே முன்னோக்கிக் கொண்டு சென்றிருந்தால் இலங்கை இன்று அபிவிருத்தி அடைந்திருக்கும். நாட்டில் ஏற்பட்ட கலவரங்கள், யுத்தம் மற்றும் அவரது கொள்கை பற்றிய புரிதல் இன்மை காரணமாக, அவரது சமூக, பொருளாதாரக் கொள்கைகளின் பலன்களை முழுமையாக அடைய முடியாமல் போனது.

எமது வலயத்தின் இந்தியா, சீனா, வியட்நாம், உள்ளிட்ட நாடுகள் ஜே.ஆர்.ஜயவர்தனவின் கொள்கைகளையே பின்பற்றின. அந்த நாடுகள் காலத்துக்கு ஏற்றவாறு தமது கொள்கைகளை மாற்றிக்கொண்டு முன்னோக்கிச் சென்றன.

1938களில் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக அரசியலுக்குப் பிரவேசித்த அவர், 1946களில் ஐக்கிய தேசிய கட்சியை ஆரம்பித்தார். இலங்கையின் முதலாவது கெபினட் அமைச்சராக தெரிவானதோடு, டட்லி சேனநாயக்கவுக்குப் பின்னர் 1973களில் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார்.

1977 தேர்தலில் இலங்கையின் பிரதமரான ஜே.ஆர்.ஜயவர்தன அரசியலமைப்பு மாற்றத்தின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உருவாக்கினார்.

அணிசேரா அமைப்பின் ஆறாவது பொதுச் செயலாளராக அவர் தனது நாட்டுக்காக ஆற்றிய சேவைகள் மகத்தானவை. அதனை நினைவுகூருவது பாராட்டப்பட வேண்டியது - என்றார்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவிக்கையில், கட்சி சார்பற்ற நபராக இன்று இந்த நிகழ்வில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நட்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை ஜே.ஆர்.ஜயவர்தன முன்வைத்தார். அரச நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார். இதன் மூலம், நாட்டின் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்தக் கூட்டு முயற்சிகளால்தான் இன்று சீனா பொருளாதார ரீதியாக வலுவாக உள்ளது. ஜே.ஆர்.ஜயவர்தன ஒரு முடிவை எடுத்தால், அந்த முடிவை மாற்றமாட்டார். அதை மாற்றினால், அது மக்கள் நல ஆட்சியை உருவாக்க மட்டுமே செய்யப்பட்டது.

அவருடைய ஆட்சியின்போது அவருடன் ஒரு நல்ல இளைஞர் கூட்டம் இருந்தது. இளைஞர்களுக்கு வாய்ப்பையும் அதிகாரத்தையும் கொடுத்தார்.

தற்போதைய அரசியல் தலைவர்களுக்கு ஜே.ஆர்.ஜயவர்தன ஒரு சிறந்த முன்மாதிரி என்றார். ஜே.ஆர்.ஜயவர்தன நிலைய நிர்வாக சபை உறுப்பினரும் ஜே.ஆர்.ஜயவர்தனவின் மூத்த பேரனுமான பிரதீப் ஜெயவர்தன, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் காரணமாகவே வடக்கில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர முடிந்தது.

இன்று நாட்டில் நிலவும் பல பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசாங்கத்தால் தீர்வுகளை வழங்க முடிந்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் துணிச்சலான தீர்மானங்களை நாம் பாராட்டுகின்றோம். நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்துக்கு நாம் பூரண ஆதரவளிக்கிறோம். எனவே, நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு ஜனாதிபதிக்கு அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர் பந்துல குணவர்தன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்



**கலைஞர்களுக்கு பரிசளித்து கௌரவிக்கும் விழா நேற்று முன்தினம் (17) வத்தளை, மாபோல நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தின் தலைவர் விஜய ராஜாவின் ஏற்பாட்டில் ஐந்தாவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் ஹாஷிம் உமர், சிறப்பு அதிதியாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், வத்தளை மாபோல முன்னாள் நகர சபை உறுப்பினர் சசிகுமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சிறந்த ஊடகவியலாளருக்கான விருது எம்.எஸ்.சலீமுக்கும், சமூக சேவையாளருக்கான விருது டீ.தவசீலனுக்கும் வழங்கப்பட்டன.**

# பொலிஸாரின் நடவடிக்கைகள் தமிழர், சிங்களவர் என்ற மனநிலையிலேயே புலப்படுத்துகிறது

## கஜேந்திரன் எம்.பி. மீதான தாக்குதலுக்கு சந்திரகுமார் கண்டனம்

இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் பொலிஸார் முன்னிலையில் சில குமபலால் தாக்கப்படும்போது, பொலிஸார் நடந்துகொண்ட விதம் மிகவும் கண்டனத்திற்குரியது - என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

செல்வராசா கஜேந்திரன் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினராவார். அவர் இந்த நாட்டின் ஓர் உயர்ந்த சபையின் உறுப்பினர். அவரை தெருவில் ஒன்றுகூடிய சில கும்பல் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸாரின் முன்னிலையில் தாக்குவதென்பது மிகவும் காட்டுமிராண்டித்தனமான செயல்.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவருக்கே இந்த நிலைமை என்றால் இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலைமை எப்படியிருக்கும்? வன்முறைகளைத் தடுத்து சட்டத்தை நிலைநிறுத்த வேண்டிய பொலிஸார் அந்த இடத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காதிருந்தது என்பது தமிழ் மக்கள் விடயத்தில் அவர்களின் நிலைப்பாட்டை அப்பட்டமாக காட்டி நிற்கிறது.

இதுதான் இந்த நாட்டின் நிலைமை, தமிழ் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக நடத்தப்படுகிறார்கள் என்பதற்கு கஜேந்திரன் மீதான தாக்குதல் சம்பவம் என்பது ஒரு நல்ல உதாரணம் எனத் தெரிவித்த அவர், நினைவேந்தலுக்கான உரிமை வழங்கப்பட்டிருந்த நிலையில் அதனை மேற்கொள்ளவிடாது வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும். அது மட்டுமன்றி, மக்கள் பிரதிநிதி ஒருவரை வீதியில் விரட்டி விரட்டி தாக்குபவர்கள் மீதும் அந்தத் தாக்குதல் சம்பவத்தை கட்டுப்படுத்தாது நின்ற பொலிஸார் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# விடுதியில் தங்கியிருந்தவர் திடீர் மரணம்

## கொஹுவலையில் சம்பவம்

கொஹுவலையிலுள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த நபர் ஒருவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் நேற்று முன்தினம் (17) அதிகாலை உயிரிழந்திருந்தார்.

அவிசாவளை பிரதேசத்தைச் சேர்ந்த 35வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தை ஒருவரே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

அவர் தங்கியிருந்த அறையிலுள்ள மேசையிலிருந்து பல மாத்திரைகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

உயிரிழந்தவர் தனது மனைவியைப் பிரிந்து செல்வதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தனது கணவரிடமிருந்து சட்டப்பூர்வமாகப் பிரிந்துசெல்ல விரும்பும், 33 வயதுடைய பெண் ஒருவருடன் உயிரிழந்தவர் உறவு கொண்டுள்ளதாகவும், இருவரும் கடந்த சனிக்கிழமை பிற்பகல் குறித்த விடுதிக்கு சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை உயிரிழந்த நபர் வாந்தி எடுக்க ஆரம்பித்துள்ளதுடன், சிறிதுநேரத்தில் அவரின் உடல் நிலை மேலும் பாதிப்படைந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, ஹோட்டல் நிர்வாகம் அம்பியுலன்ஸுக்கு அழைப்புவிடுத்ததையடுத்து, அங்கு வந்த சுகாதார ஊழியர்கள் அவர் உயிரிழந்துள்ளதை உறுதிப்படுத்தியுள்ளனர்.



திருகோணமலை, கல்லூரி வீதி இரட்ணசிங்கம் பிள்ளையார் ஆலய வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீரடி சாயி பாபா சன்னிதானத்தில் ஸ்ரீ தத்தாத்ரேயர் திருவுருவப்படம் பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு கொழும்பு புதுச்செட்டித்தெரு சீரடி சாய்பாபா ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன் தலைமையில் சனிக்கிழமை காலை இடம்பெற்றது. விநாயகர் ஆலய ஆதீனகர்த்தா கனகசபாபதி சர்மா, சிவாச்சாரியார் கனக பாலகிருஷ்ணன் சர்மா ஆகியோர் பூஜை, கிரியைகளை மேற்கொண்டனர். நிகழ்வில் சாயி பஜனையும் நடைபெற்றது.

# கடலரிப்பை கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்கவும்!

## சாய்ந்தமருது மீனவர்கள் வீதிமறியல் போராட்டம்





நூருல் ஹுதா உமர், பாறுக் ஷிஹான்

சாய்ந்தமருது பிரதேசத்தில் தீவிரமடைந்துள்ள கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம் துரித நடவடிக்கை எடுக்குமாறு கோரி மீனவர்கள் நேற்றுக் காலை(18) வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர் .

இப்போராட்டத்தில் சாய்ந்தமருது மீனவர்களும் மீனவ வாடி உரிமையாளர்களும் கலந்துகொண்டனர்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் தீவிரமடைந்துள்ள கடலரிப்பினால் மீனவ வாடிகள் முழுமையாக கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் கரையோரம் பேணல் திணைக்களம் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் கடலரிப்பைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பாறாங்கற்களை சாய்ந்தமருது கடற்கரையை அண்டிய வீதியில் குவித்து வைத்துள்ளதால் மீனவ நடவடிக்கைகளுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக அமைந்துள்ளதாகவும் போராட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

மேலும், மீன்பிடி வள்ளங்களை கரைக்கு இழுத்து வைக்க முடியாதளவில் கடலரிப்பு தீவிரமடைந்துள்ளது. எனவே, கடலரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு கரையோரம் பேணல் திணைக்களம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரையோரம் பேணல் திணைக்களத்தின் அசமந்தப் போக்கினால் மீனவர்கள் தொடர்ந்தும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அதனைத் தடுக்க துரித நடவடிக்கை எடுக்குமாறும் போராட்டக் களத்தில் கோஷங்கள் எழுந்தன. போராட்டக்காரர்கள் வீதிகளை இடைமறித்து மீன்பிடி வள்ளங்களை நிறுத்தி வைத்திருந்தமையால் முக்கிய மீன்வியாபார சந்தையைக் கொண்டிருக்கும் இப்பிரதேசத்தில் சுமார் அரை மணித்தியாலத்துக்கும் மேலாக வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில், போராட்டக் களத்துக்கு விஜயம் செய்த சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் தலைமையிலான பொலிஸார், கரையோரம் பேணல் திணைக்கள உத்தியோகத்தர் ஏ.எம். நுஸ்ரத் அலியோடும் மீனவர்களோடும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு நிலைமை சுமூக நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

வாக்குறுதியளிக்கப்பட்டவாறு பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் மீனவர்கள் சுட்டிக்காட்டினர்.

இதேவேளை, போராட்டக் களத்துக்கு விஜயம் செய்த சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம் மீனவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

### சாய்ந்தமருதில் கடலரிப்பு தீவிரம்:

# களநிலைவரம் தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் விஜயம்



மாளிகைக்காடு,சம்மாந்துறை மேலதிக செய்தியாளர்கள்

சாய்ந்தமருது பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக கடலரிப்பு உக்கிரமடைந்துள்ளது. இதனால் மீனவ வாடிகள், பள்ளிவாசல், பூங்காக்கள் என்பன வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளதுடன் மீன்பிடி நடவடிக்கையும் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில், சாய்ந்தமருது பிரதேச மீனவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதற்காக அப்பகுதிக்கு களவிஜயமொன்றை மேற்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ்,மேலதிக நடவடிக்கை எடுக்கும் வகையில் நகர திட்டமிடல், கரையோரம் பேணல், கரையோர பாதுகாப்பு இராஜங்க அமைச்சர் அருந்திக்க பெர்னாண்டோவை தொடர்புகொண்டு கடலரிப்பின் தீவிரத்தன்மையை விளக்கிக் கூறியதுடன் அதற்கான நிரந்தரத் தீர்வின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

இதன்போது களத்தில் நின்ற மீனவர்களுடனும் கரையோரம் பேணல் திணைக்கள அதிகாரிகளுடனும் கலந்துரையாடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ், கரையோரம் பேணல் திணைக்கள



பிராந்தியப் பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு இந்த விடயம் தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து கேட்டறிந்து கொண்டார்.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். சலீம், கரையோரம் பேணல் திணைக்கள சாய்ந்தமருது பிரதேச அதிகாரிகள் மற்றும் மீனவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# ஹிறாநகர் கிராமத்தில் யானைகள் தொல்லை

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

பொத்துவில் நிருபர்



பாலமுனை, ஹிறா நகர் மீள்குடியேற்றக் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் அப்பகுதி வாழ் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் மாலை வேளையானதும் ஹிறா நகர் கிராமத்துக்கு அண்மையிலுள்ள முள்ளிக்குளத்து மலையடிப் பிரதேசத்தைச் சூழவுள்ள காட்டுப் பிரதேசத்துக்கு உணவு உட்கொள்வதற்காக வரும் யானைகள் இரவு வேளைகளில் காடுகளுக்குள்ளிருந்து வெளியில் வந்து வயல் பிரதேச வீதியினால் வருகின்ற விவசாயிகள் மற்றும் பொதுமக்களைத் துரத்தி தாக்க முற்படுவதும் கிராமத்துக்குள் உட்புகுந்து வீடுகளை உடைத்து சேதப்படுத்தியும் வருவதுடன் வீட்டுத் தோட்டங்களிலுள்ள வாழ்வாதார பயிர்களையும் துவம்சம் செய்கின்றன.

இந்நிலையில், ஹிறா நகர் கிராமத்துக்குள் நேற்று (18) நள்ளிரவு வேளை உட்புகுந்த யானைகள் வீடொன்றை உடைத்து உடமைகளையும் வீட்டுத்தோட்டப் பயிர்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இச்சம்பவத்தின்போது வீட்டிலுள்ளவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர்.

அண்மைக்காலமாக பாலமுனை ஹிறா நகர் மீள்குடியேற்றக் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக தங்களது சொந்த இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து செல்லக்கூடிய சூழ்நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

எனவே, காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





உலக தூய்மை தினத்தை முன்னிட்டு சாய்ந்தமருது அல்-ஜலால் மகா வித்தியாலயத்தில் சிரமதான நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பாடசாலை சமுகத்தினர் பங்கேற்றனர்.

**படப்பிடிப்பு:** இஸ்மாயில்புரம் செய்தியாளர்

# உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டுதல்-கௌரவிப்பு



துறைநீலாவணை நிருபர்

பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பெரிய கல்லாறு,உதய புரம் தமிழ் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் சாதனை படைத்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று திங்கட்கிழமை முகமாலை வித்தியாலயத்தின் முதல்வர் தங்கராசா சசிகாந்தன் தலைமையில் பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் பட்டிருப்பு வலயக் கல்விப்பணிப்பாளர் எஸ்.சிறிதரன், பாடசாலை மேம்பாட்டுக்குப் பொறுப்பான வலயக் கல்வி அலுவலகப் பிரதிநிதி பா.துஸ்யந்தன், பாடசாலையின் முன்னாள் அதிபர் சி.சசிதரன், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் எஸ்.கணேசலிங்கம் உட்பட ஆசிரியர்கள்,மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவத் தலைவர்களுக்கு அதிதிகள் சின்னம் சூட்டியதுடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் சாதனை படைத்த மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினர்.

# கனகர் கிராமத்தில் மீள்குடியேற்றம்: இரண்டாம் கட்டக் கலந்துரையாடல்

வாழைச்சேனை செய்தியாளர்

பொத்துவில், கனகர் கிராமத்தில் மீள்குடியேற்றப்படாத மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பான இரண்டாம் கட்டக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் பொத்துவிலில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், பொத்துவில் பிரதேச சபை முன்னாள் பிரதித் தவிசாளர் பார்த்தீபன், கனகர் கிராமத்தின் கிராமசேவை உத்தியோகத்தர் உள்ளிட்ட பிரதேச பொதுமக்கள் கலந்துகொண்டனர். கனகர் கிராமத்திலிருந்து யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் முப்பது வருடங்களுக்கும் மேலாக மீள்குடியமர்த்தப்படாமல் இருந்த நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் கலையரசனின் முயற்சியால் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர், சக பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பின் மூலம் 202 குடும்பங்கள் தெரிவுசெய்யப்பட்டு முதற்கட்டமாக 76 குடும்பங்களுக்கான காணிகள்





வழங்கப்பட்டன. மிகுதி குடும்பங்களுக்கும் காணி வழங்குவதற்கான நடவடிக்கைகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இருந்தும் காணிகள் வழங்கப்படாத மிகுதி குடும்பங்கள் தங்களுக்கு காணி வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அண்மைக்காலமாக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து காணிகள் வழங்கப் படாதவர்களுக்கு காணிகள் வழங்குவது தொடர்பான முதற்கட்டக் கலந்துரையாடல் பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்நிலையில், மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தும் முகமாக நேற்றுமுன்தினம் இரண்டாம் கட்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.இதன்போது கனகர் கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் பாராளுமன்ற உறுப்பினருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த மேற்கொண்ட சூழ்ச்சியே ஈஸ்டர் தாக்குதல்

## பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெரிவிப்பு

மாளிகைக்காடு செய்தியாளர்

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக சனல் 04 வெளியிட்ட ஆவணப்படம் புனையப்பட்ட விடயமல்ல. அதில் அவிழ்க்கப்படாத இன்னும் பல மர்மங்கள் உள்ளது போன்றே தெரிகிறது. சக்திவாய்ந்த அந்நிய நாடுகளின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே இப்படியான சம்பவங்கள் இலங்கையில் அரங்கேறுகின்றன. இலங்கை முஸ்லிம்களை குறிவைத்து அதிகார கதிரையை நோக்கியதாக முன்னெடுக்கப்பட்ட சக்திகளின் பந்தாடலுக்குள் சமூகம் சிக்கிக்கொண்டுள்ளது. பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் கொலையுடனேயே முஸ்லிம்கள் மீதான பந்தாடல்கள் ஆரம்பித்துள்ளதாக நம்புகிறேன் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

மருதமுனை மருதூர் கொத்தன் கலையரங்கில் நேற்றுமுன்தினம் இரவு (17) இடம்பெற்ற மருதமுனை பைத்துல் ஹெல்ப் போ ரிலீப் அமைப்பின் நிகழ்வொன்றில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,



தெற்காசியாவின் பூகோள அரசியல் போட்டிக்காக இலங்கையின் நிலையை மோசமான சூழ்நிலைக்கு சில சக்திகள் கொண்டு செல்கின்றன. அமெரிக்க ரஷ்ய பனிப்போரில் சில நாடுகள் சிக்கிக்கொண்டது போல சீன-அமெரிக்க பூகோள அரசியல் போட்டியில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு கேந்திர நிலையமான இலங்கை மாட்டிக்கொண்டுள்ளது. இலங்கையில் யார் அரசாங்கம் அமைக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பது மேற்கத்தேய சக்திகளாகவே இருக்கின்றன. அவர்கள் சுயாதீனமாக எமது நாட்டை கொண்டுசெல்ல விடமாட்டார்கள். அவர்கள் சரியாக திட்டமிட்டு நாட்டை சீரழிக்க காய் நகர்த்துவார்கள்.

குறிப்பாக சனல் 4வில் வெளியான காணொளியில் ஆசாத் மௌலானா கூறிய விடயங்களை தட்டிக்கழிக்க முடியாது. அதில் பல உண்மைகள் இருக்கின்றன. முஸ்லிம்களை பலிக்கடாவாக்கி தங்களுடைய அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்த வெளிநாட்டு சக்திகளும் உள்ளூர் சக்திகளும் சேர்ந்து செய்த பாரிய சூழ்ச்சியே ஈஸ்டர் தாக்குதல் சம்பவமாகும். இதில் முஸ்லிம் சமூகம் பலிக்கடாவாக்கப்பட்டு கிறிஸ்தவ சமூகமும் மோசமாக பாதிக்கப்பட்டது. அது போன்றே தலைவர் அஷ்ரபின் மரணமும் பல மர்மங்கள் நிறைந்ததாக அமைந்துள்ளன. அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வாய்ப்பிருப்பதனால் பல்வேறு காய் நகர்த்தல்கள் இடம்பெறும். எனவே இலங்கையர்களான நாம் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ் பேராசிரியர்கள் தனது இனத்தின் வேட்கைக்காக மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு செய்து களப்பணி செய்வது போல முஸ்லிம்களை அரசியல் மயப்படுத்த பேராசிரியர் எம்.எம். பாஸீல் களத்தில் இருப்பதை காண்கிறேன்.இப்படியானவர்களை முஸ்லிம் சமூகம் பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு எதிரான சவால்களை முறியடிக்க இளைஞர்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் உலமாக்கள் முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

# திலீபனின் ஊர்தி மீதான தாக்குதலை கண்டிக்கிறோம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் நகுலேஸ் தெரிவிப்பு

செங்கலடி, வாழைச்சேனை செய்தியாளர்கள்



தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை அனுஷ்டிக்கும் முகமாக தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினால் மேற்கொள்ளப்படுகின்ற நினைவு ஊர்தி பேரணி மீதும் அக்கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்டோர் மீதும் திருகோணமலையில் வைத்து இரு இடங்களில் சிங்களக் காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தெரிவித்துள்ளார்.

மேற்படி சம்பவத்தைக் கண்டித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

தாக்குதலை மேற்கொண்டவர்களின் செயற்பாடும் அவர்களை பின்னிருந்து இயக்குபவர்களின் எண்ணப்பாடும் இந் நாட்டை பின்நோக்கிக் கொண்டு செல்லும் வகையிலேயே அமைந்துள்ளது.முப்பது வருட யுத்தம் இந்த நாட்டில் ஏற்படுத்திய அழிவுகளை எண்ணி இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் ஒன்றே நாட்டில் எதிர்கால சுபிட்சத்துக்கு ஏற்ற வழி என்று பலரும் ஜனநாயக வழியில் செல்கையில் குறித்த தாக்குதல் மீண்டும் இனங்களுக்கிடையிலான முறுகலை வலுப்படுத்தும் விதமாக மாறியிருக்கின்றது.

இவ்வாறான நிலைமைகளைக் கட்டுப்படுத்த வேண்டிய இராணுவம், பொலிஸார் முன்னிலையில் இத்தாக்குதல் இடம்பெற்றமையானது இந்த நாட்டின் பாதுகாப்புத் தரப்பு தமிழ் மக்களையும் தமிழ் பிரதிநிதிகளையும் எந்த இடத்தில் வைத்து நோக்குகின்றது என்பதை திட்டவட்டமாகப் புலப்படுத்துகின்றது.

எந்த இனமாக இருந்தாலும் தன் இனத்துக்காக போராடியவர்கள் அவர்களுக்கு உயர்ந்தவர்களே. அவர்களுக்கு அந்த இனத்தினால் கொடுக்கப்படும் மரியாதையை மற்ற இனத்தவர்கள் வஞ்சித்தல் என்பது ஜனநாயகப் பண்பு அல்ல. யுத்த வீரன் என்பவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை துட்டகைமுனுவின் வரலாற்றில் இருந்து சிங்களவர்கள் அறியாமலிருப்பது, அதுவும் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு இவ்வாறான தாக்குதல்களை நடத்துபவர்கள் அறியாமலிருப்பது அவர்களின் சிறுமைத் தனத்தையே கோடிட்டுக்காட்டுகின்றது.

கிழக்கில் தமிழ் இனம் எந்த நிலையில் இருக்கின்றதென்பதை இந்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் மேற்படி சம்பவம் புலப்படுத்தியிருக்கின்றது. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு எங்களுக்குள் ஒற்றுமையின்மையே காரணமாகும். மேற்படி சம்பவமானது நம் ஒற்றுமைக்கு விட்டிருக்கும் சவாலாகும். இதிலிருந்து நாம் படிப்பினை பெறாவிட்டால் இன்று கிழக்கில் இடம்பெற்றது நாளை வடக்கில் இடம்பெற்றாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.எனவே தமிழ் மக்கள் சார்ந்த வேலைத் திட்டங்கள், இவ்வாறான நினைவேந்தல்கள் ஆகியவற்றை நாம் ஒற்றுமையாக ஒருமித்துச் செய்ய வேண்டும். இதன் போதுதான் இவ்வாறான சிங்களக் காடையர்களின் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போடியார் புலம்பல்!



தியாகி திலீபனின் வாகன ஊர்திய அக்கரைப்பற்றுல இருந்த சில காவாலி முஷ்லிம்கள் சிங்கக்கொடியோட வந்து எதிர்ப்பு காட்டி தொடங்கினத திருகோணமலயில கிடந்த சிங்கள ஏவல் நாய்கள் முடிச்சுவைச்சிருக்காங்க எலுவா...?

அடே நாசமறுப்பானுகளே நீங்க இப்படி செய்யிறதாலதாண்டா மௌனமாக கிடக்கிற தமிழர்களுக்கு ஒள்ளுப்பம் எண்டாலும் உசாரும் உணர்வும் வந்திருக்கு...

எண்டாலும் இந்த விசயத்தில் முஷ்லிமும், சிங்களவரும் கையில சிங்கொடிய பிடிச்சு அந்த கொடிக்கே கரிபூசிப்போட்டயல் எலுவா..?

# "உள்ளூராட்சி மன்ற பெண் பிரதிநிதிகள் இன ஐக்கியத்தின் அடித்தளமாக இருக்க வேண்டும்"



மட்டக்களப்பு செய்தியாளர்

மக்கள் சக்தியின் பலமான அடித்தளத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றப் பெண் பிரதிநிதிகள் தமது அரசியல் ஆளுமையை நிருபிக்கும் வண்ணம் இன ஐக்கியத்தின் அடித்தளமாக செயல்பட வேண்டும் என தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட சர்வமதப் பேரவைக்கான இணைப்பாளர் ஆர். மனோகரன் தெரிவித்தார்.

சமூகங்களுக்கிடையிலான சமாதானத்தையும் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் தொடர்ந்து பேணிவருவதன் அவசியத்தை வலியுறுத்தும் செயலமர்வு ஞாயிற்றுக்கிழமை (17) மஞ்சந்தொடுவாய் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இச்செயலமர்வில், மாவட்ட சர்வமதப் பேரவைக்கான உதவி இணைப்பாளர் எம்.ஐ. அப்துல் ஹமீட், உள்ளூராட்சி மன்ற முன்னாள் பெண் உறுப்பினர்கள், பெண் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சமூக நல்லுறவு, சகவாழ்வு, நல்லிணக்கம், சமாதானம் ஆகியவற்றோடு இன ஐக்கியத்தை கட்டிக்காக்கும் விடயங்களுக்காக செய்து முடிக்கப்பட வேண்டிய செயல் திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன.

அதேவேளை மோதல் நிலைமாற்றத்துக்காக சகவாழ்வை ஏற்படுத்தும் சக்திமிக்க தரப்பாக உள்ளூராட்சி மன்ற முன்னாள் பெண் உறுப்பினர்களும் எதிர்காலத்தில் தெரிவு செய்யப்படப் போகும் பெண் உறுப்பினர்களும் இருக்க வேண்டும் என்ற கருத்தும் அங்கு வலியுறுத்தப்பட்டது.

# தற்கொலை தடுப்பு தினம்

# கல்முனை வைத்தியசாலையில் விழிப்புணர்வு கருத்தரங்கு





பாண்டிருப்பு நிருபர்

உலக தற்கொலைதடுப்பு தினத்தை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் உளநலப் பிரிவு நடத்திய விசேட விழிப்புணர்வுக் கருத்தரங்கு வைத்தியசாலையின் பணிப்பாளர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உளவியலாளர் சம்ருத் ஷெரிப்தீன், வைத்தியசாலையின் உளநல வைத்திய நிபுணர் ஜுராச் , வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் து.மதன், வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள் ,உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# ஆரையம்பதி ஆலய அலங்கார உற்சவம்

ஆரையம்பதி செய்தியாளர்

மட்டக்களப்பு, ஆரையம்பதி -03 அருள்மிகு வெள்ளை மணல் ஸ்ரீ அரசடி பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பெருவிழா எதிர்வரும் ஒக்டோபர் 15 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.தொடர்ந்து வரும் ஐந்து நாள் உற்சவத்தில் 18 ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு தேரோட்ட திருவிழாவும் 19 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெற்று அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும். அதனையடுத்து அன்றிரவு விநாயகப் பெருமானின் திருப்பொன்னூஞ்சலும் இடம் பெற்று உற்சவம் இனிதே நிறைவு பெறும்.

கிரியாகால நிகழ்வுகள் அனைத்தும் ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ வ.ஹரிகர சர்மா தலைமையில் உதவிக் குருமார்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெறும்.

# சிசுபல வேலைத் திட்டத்தின் கீழ் அப்பியாசக் கொப்பிகள் விநியோகம்





மட்டக்களப்பு

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் சிசுபல வேலைத் திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு காத்தான்குடி பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது காத்தான்குடி பிரதேச செயலக பிரிவில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அங்கத்தவர்களின் சிறுவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்துக்குட்பட்ட 18 கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட தரம் ஐந்தில் கல்வி பயிலும் 266 பாடசாலை மாணவர்களுக்கு இதன்போது அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ்.சில்மியா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர், முகாமைத்துவப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமையாளர், வங்கி முகாமையாளர்கள், அதிபர்கள், வலய உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்புக்கான அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவிகள் பல்கலைக்கு தகுதி

அக்கரைப்பற்று செய்தியாளர்

அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியிலிருந்து 2022 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுள் உயிரியல் விஞ்ஞானத் துறையில் 26 பேரும் பௌதிக விஞ்ஞானத் துறையில் 02 பேரும் வணிகத்துறையில் 03 பேரும் கலைத்துறையில் 09பேரும் பல்கலைக்கழகத்துக்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.2022 உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் அக்கரைப்பற்று வலய பாடசாலைகளில் அக்கரைப்பற்று ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரி முன்னணியில் திகழ்கிறது. மாணவர்கள் சிறப்பான அடைவுகளை பெறுவதற்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்கிய வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலக பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், பகுதித் தலைவர், பாட ஆசிரியர்கள், வளவாளர்கள், பாடசாலை முகாமைத்துவக்குழுவினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவிகள் சங்கத்தினர், பாடசாலையின் அனைத்து ஆளணியினர், கல்வி தொடர்பான ஒத்துழைப்புக்களை வழங்கிய சமூக நிறுவனங்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவருக்கும் கல்லூரி அதிபர் நஜீமா ஹாறுதீன் நன்றி தெரிவித்துள்ளார்.



**மட்டக்களப்பு- வாழைச் சேனை பிரதான வீதி சந்திவெளிப் பிரதேசத்தில் நேற்று திங்கட் கிழமை மாலை வேன் ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.**
**படம் : மாவடிப்பள்ளி செய்தியாளர்**

# மாணவி எப்சிபாவின் திடீர் மரணத்தினால் பெற்றோர், உறவினர்களுக்கு சந்தேகம்

புளியந்தீவு செய்தியாளர்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 16வயது மாணவி சாந்தகுமார் எப்சிபாவின் திடீர் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் வைத்தியசாலை நிர்வாகத்துக்கெதிராக பெற்றோரும் அவர்களது உறவினர்களும் அமைதிவழி ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இதுபற்றி எப்சிபாவின் தாயார் தெரிவிக்கையில், எனது மகள் தொழு நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அது ஆரம்பநிலையில் இருப்பதாகவும் வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டது. அவர்களின் ஆலோசனைக்கமையவே கடந்த புதன்கிழமை(13) வைத்தியசாலையில் அனுமதித்தோம். எனது மகள் நன்றாகவே



இருந்தாள். அடுத்தநாள் (14) அவள் மரணமடைந்தாள்.

எனது மகளுக்கு வைத்தியர்கள் அறிவுறுத்திய மாத்திரைகளுக்கு மேலதிகமாக வைத்தியசாலையால் வழங்கப்பட்டு அதை அவள் உட்கொண்டிருக்கலாமென நான் சந்தேகிக்கிறேன். அதுவே என் மகளின் உயிரை காவு கொண்டிருக்கிறது என நானும் எனது உறவினர்களும் சந்தேகப்படுகிறோமென அழுது புலம்பினார்.

இதுபற்றி வைத்தியசாலைப் பணிப்பாளர் கலாரஞ்சனி கணேசலிங்கத்திடம் வினவியபோது, சாந்தகுமார் எப்சியாவின் மரணத்தின் காரணத்தை இப்போது என்னால் கூறமுடியாது. அது தொடர்பான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அது முடிவுற்ற பின்னரே கூறமுடியும். அது வரைக்கும் எதுவிதமான முடிவுக்கும் நான் வரமுடியாது. இது ஒரு புறமிருக்க எப்சியாவின் மரணம் தொடர்பாக எவரும் எழுத்து மூலமான, அல்லது வாய்மூலமான சந்தேகத்தை வைத்திய சாலை நிர்வாகத்துக்கு முன்வைக்கவில்லை என்றும் கூறினார்.

# மகள் மீது பாலியல் சேட்டை தந்தைக்கு விளக்கமறியல்

கனகராசா சரவணன்

கொக்குவில் பொலிஸ் பிரிவில் 17 வயதுடைய தனது மகளை பாலியல் சேட்டை புரிந்த 58 வயது தந்தையை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் கடந்த வெள்ளிக்கிழமை (15) உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து சிறுமியின் தாய் கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (15) செய்த முறைப்பாட்டையடுத்து குறித்த சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் அவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (15) ஆஜர்படுத்தியபோதே விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸ் நிலைய பெண்கள் சிறுவர் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர்.

# முக்கிய வீரர்கள் இல்லாமல் இறுதிப் போட்டி வரை வந்தோம். உலகக்கிண்ணத்தில் மெண்டிஸ், சதீர, அசலங்க ஆகியோர் நன்றாக ரன் குவிப்பார்கள் - சானக்க நம்பிக்கை

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

ஏ. அகீல் சிஹாப்

ஆசிய கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இலங்கை அணி இந்தியாவிடம் படுதோல்வியடைந்து கிண்ணம் வெல்லும் வாய்ப்பை இழந்தது. இந்நிலையில், தோல்வியின் பின்னர் பரிசளிப்பு நிகழ்வில் கருத்து தெரிவித்த அணித்தலைவர் தசுன் சானக்க,

சிராஜ் இன்று (நேற்று முன்தினம்) மிகச் சிறப்பாக பந்து வீசினார். அவர் இந்தப் போட்டியை அணுகிய விதத்துக்கு அவரை பாராட்டியே ஆக வேண்டும். இந்த ஆடுகளம் பேட்டிங்




செய்ய சாதகமாக இருக்குமென நான் எண்ணினேன். ஆனால், புறச் சூழ்நிலைகள் பெரியளவில் இந்த நாளை கடினமானதாக மாற்றிவிட்டது. நாங்கள் எங்கள் செயற்பாட்டை மாற்றியிருக்கலாம். இன்னும் எங்கள் பேட்டிங் டெக்னிக்கை இறுக்கமாக மாற்றி, மிடில் ஓவர்கள் வரை தாக்குப் பிடித்து பின் ரன் சேர்த்திருக்கலாம்.

ஆனால், இந்தத் தொடரில் சதீர சமரவிக்ரம, குசல் மெண்டிஸ் மிடில் ஓவர்களில் ஸ்பின் பந்துகளில் நன்றாக ரன் குவித்திருக்கிறார்கள். அசலங்க அழுத்தமான நேரங்களில் நன்றாக பேட்டிங் செய்துள்ளார். உலகக் கிண்ணத்தில் இவர்கள் மூவரும் நன்றாக ரன் குவிப்பார்கள். எங்கள் பந்துவீச்சாளர்களும் உலகக் கிண்ணத்தில் நன்றாக செயற்படுவார்கள் என நான் நம்புகிறேன்.

5 முக்கிய வீரர்கள் இல்லாமல் நாங்கள் நல்ல அணிகளை வீழ்த்தி இறுதிப் போட்டிவரை வந்திருக்கிறோம். நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன் எங்கே ஆரம்பித்தோமோ, அந்த வகையில் இது நல்ல முன்னேற்றம். பெரியளவில் இந்தப் போட்டியைக் காண வந்த எங்கள் ரசிகர்களுக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன். உங்களை ஏமாற்றியதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். கிரிக்கெட் வீரர்களாக நாங்கள் உங்கள் மீது அன்பு வைத்துள்ளோம். அவர்கள் விளையாடும் சிறப்பான கிரிக்கெட்டுக்காக இந்திய அணிக்கு வாழ்த்துகள் - என்றார்.




## ஒரே ஆட்டத்தில் பல சாதனைகளைப் படைத்த சிராஜ்




நிறைவுக்குவந்த ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டம் வெல்வதற்கு முக்கிய காரணமாக திகழ்ந்த மொஹமட் சிராஜ் அந்த ஆட்டத்தில் பல சாதனைகளை படைத்தார்.

போட்டியின் தனது 2ஆவது ஓவரில் 4 விக்கெட்டுகளை அள்ளிய சிராஜ் ஒருநாள் கிரிக்கெட்டில் முதன்முறையாக ஒரே ஓவரில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய இந்திய வீரராக வரலாற்றில் இடம்பிடித்தார்.

குறைந்த பந்தில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியர்கள் பட்டியலில் முதல் இடத்தில் இருக்கும் இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் சமிந்தா வாஸுடன் இணைந்தார். அவர் 16 பந்துகளில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

7 ஓவர்களில் 1 ஓவர் மெய்டன் வீசி 21 ஓட்டங்கள் மட்டுமே விடுத்து 6 விக்கெட்டுகளை வீழ்த்திய சிராஜ், ஒருநாள் போட்டியில் தனது சிறந்த பந்துவீச்சு பிரதியை பதிவு செய்தார். மேலும், ஆசிய கிண்ண இறுதிப் போட்டியிலும் சிறந்த பந்துவீச்சுகளில் ஒன்றாக பதிவானது.

ஒருநாள் கிரிக்கெட்டில் இலங்கைக்கு எதிராக ஒரு போட்டியில் சிறந்த பந்துவீச்சை பதிவுசெய்த வீரர் என்ற பாகிஸ்தான் ஜாம்பவான் வக்கார் யூனுஸின் சாதனையை முறியடித்து சிராஜ் புதிய சரித்திரம் படைத்தார். இதற்கு முன் வக்கார் யூனுஸ் கடந்த 1990ஆம் ஆண்டு 26 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

## நடுநிலையாக போட்டியிடும் இலங்கை ரக்பி அணி



ஹாங்சோ 2022 ஆசிய விளையாட்டுப் போட்டியில், ஆசிய ஒலிம்பிக் கவுன்சில் கொடியின் கீழ் இலங்கை ஆண்கள் ரக்பி செவன்ஸ் அணி போட்டியிடவுள்ளது.

அரசியல் தலையீடுகள் தொடர்பான துணை விதிகளை மீறியதால் இலங்கை ரக்பி உலக ரக்பி கவுன்சிலால் மே மாதம் தடைசெய்யப்பட்டது. இதன் விளைவாக, நாடு அதிகாரப்பூர்வமற்ற ஏழாவது ரக்பி செவன்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் வெள்ளை, மஞ்சள் ,ஒரேஞ்சு ஆகிய OCA நிறங்களில் இலங்கை அணி விளையாடவுள்ளது. தென் கொரியா, சைனீஸ் தைபேயுடன் இணைந்து 13 அணிகள்கொண்ட ஆண்கள் போட்டியில் B குழுவுக்குள் அணி சேர்க்கப்பட்டுள்ளது.

ஆசிய ரக்பியின் நிர்வாகக் குழு, இலங்கை விளையாட்டு வீரர்கள் OCA கொடியின் கீழ் போட்டியிட அனுமதித்தது. செப்டெம்பர் 23 OCA பதாகையின் கீழ் அணி தொடக்க விழாவில் பங்கேற்கும். கூடுதலாக, அணி பதக்கம் வென்றால் OCA கீதம் இசைக்கப்படும். இலங்கைக் கொடி இலங்கையில் உயர்த்தப்படாது. தேசிய கீதம் இசைக்கப்பட மாட்டாது. ஆசிய ரக்பி, இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு, இலங்கை விளையாட்டு அமைச்சு ஆகியவற்றுக்கு இடையே பல சந்திப்புகள் நடத்தப்பட்டன. விளையாட்டு வீரர்கள் போட்டியைத் தவறவிடக்கூடாது என்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆண்கள் ரக்பி செவன்ஸ் போட்டி செப்டெம்பர் 24 முதல் 26 வரை தடகள கிராமத்திலிருந்து 36 கிலோமீற்றர் தொலைவிலுள்ள Hangzhou நோர்மல் யுனிவர்சிட்டி Cangqian தடகள மைதானத்தில் நடைபெறவுள்ளது. பெண்களுக்கான போட்டியும் அதே திகதிகளில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில், உலக ரக்பி இடைநிறுத்தத்தக்கு முன்னதாக ஆசிய ரக்பி இலங்கை அணிகளை அதன் செவன்ஸ் தொடர் நிகழ்வில் அவர்களின் NOC கொடியின் கீழ் போட்டியிட அனுமதித்தது. இன்சியான் 2014, ஜகார்த்தா-பாலெம்பேங் 2018 ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஆண்கள் அணி நான்காவது இடத்தைப் பிடித்தது.

## மீண்டும் நம்பர்-1 அணியான பாகிஸ்தான்




ஐ.சி.சி. ஒருநாள் தரவரிசையில் பாகிஸ்தான் அணி மீண்டும் நம்பர் 1 இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் மற்றும் அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்க இடையிலான 5 ஆட்டங்கள்கொண்ட ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் முடிவடைந்தன. இந்நிலையில், ஐ.சி.சி. ஒருநாள் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

அதில் நேற்று முன்தினம் வரை தரவரிசையில் முதலிடத்தில் இருந்த அவுஸ்திரேலிய அணி தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒருநாள் ஆட்டத்தில் தோல்வியைத் தழுவியதால் 3ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது. இதனால் 2ஆவது இடத்திலிருந்த பாகிஸ்தான் அணி மீண்டும் நம்பர் 1 இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஆனால், பாகிஸ்தான் நம்பர் 1 இடத்தில் நீடிக்க அடுத்து நடைபெறவுள்ள அவுஸ்திரேலியா - இந்தியா இடையிலான தொடரில் அந்த அணிக்கு சாதகமான சில அம்சங்கள் நடைபெற வேண்டும். ஏனெனில், உலகக்கிண்ணத் தொடருக்கு முன்னதாக பாகிஸ்தானுக்கு வேறு ஆட்டங்கள் இல்லை. மாறாக அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரை கைப்பற்றினால் இந்திய அணி நம்பர் 1 அணியாக வலம் வரும்.




வாரியபொல ஸ்ரீ சுமங்கல கல்லூரியை 41 - 21 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி டயலொக் பாடசாலை ரக்பி நொக்அவுட் ப்ரிமியர் கிண்ணத்தை கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி கைப்பற்றியது. டயலொக் பாடசாலை ரக்பி நொக்அவுட் சம்பியன் கிண்ணத்தை அணியின் தலைவர் தவீஷ பெரேரா, டயலொக் ஆசியாட்டா பிஎல்சியின் வர்த்தகம் மற்றும் ஊடகத் தலைவர் புபுது அலுத்கெதர மற்றும் பாடசாலை ரக்பி சம்மேளனத்தின் தலைவர் கமல் ஆரியசிங்க ஆகியோரிடமிருந்து பெற்றார். டயலொக் பாடசாலை ரக்பி நொக்அவுட் தலைவர் கிண்ணத்தை புனித ஜோன்ஸ் கல்லூரி, லலித் அத்துலத்முதலி கல்லூரியை 27 - 00 என்ற புள்ளிக்கணக்கில் வீழ்த்தி கைப்பற்றியது.

# "அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் எச்-1 பி விசா திட்டத்தை நிறுத்துவேன்"

## இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விவேக் ராமசாமி அறிவிப்பு



அமெரிக்காவில் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கிறது. இதில் குடியரசு கட்சியின் வேட்பாளராக களமிறங்குவதற்கான பலமுனைப் போட்டியில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பெரும் தொழிலதிபர் விவேக் ராமசாமியும் உள்ளார். ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படுவதற்கு குடியரசு கட்சியினரின் ஆதரவைப் பெற தீவிர பிரசாரம் மேற்கொண்டுவரும் விவேக் ராமசாமி, பல்வேறு கடுமையான மற்றும் சர்ச்சைக்குரிய திட்டங்களை அறிவித்து வருகிறார். இதன்மூலம் அவர் வேட்பாளர் போட்டிக்கான களத்தில் தனித்து தெரிவதோடு, அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகிறார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு தனியார் செய்தி சேனலுக்கு பேட்டியளித்த விவேக் ராமசாமி, தான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் அரசின் செலவீனங்களைக் குறைக்கும் வகையில் 75 சதவீதத்துக்கும் அதிகமான அரச ஊழியர்களை பணிநீக்கம் செய்வதோடு, பல அரச நிறுவனங்களையும் மூடுவேன் எனக் கூறி அதிரவைத்தார்.

இந்நிலையில், தான் அமெரிக்க ஜனாதிபதியானால் இந்தியர்கள் பெரிதும் பலன்பெறக்கூடிய எச்-1 பி விசா திட்டத்தை நிறுத்துவேன் என தெரிவித்துள்ளார். மேலும் எச்-1 பி விசா திட்டத்தை ஒப்பந்த அடிமைத்தனத்தின் வடிவம் எனவும் அவர் விமர்சித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எச்-1 பி விசா அமைப்பு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மோசமானது. குலுக்கல் முறையில் எச்-1 பி விசா வழங்கும் திட்டத்தை அகற்றிவிட்டு, உண்மையான தகுதி சேர்க்கை மூலம் விசா வழங்கப்பட வேண்டும். அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நிச்சயம் அதைச் செய்வேன். எச்-1 பி விசாவானது, அந்த விசா மூலம் அமெரிக்காவில் குடியேறியவருக்கு ஸ்பான்சர் செய்த நிறுவனத்தின் நன்மைக்காக மட்டுமே பெறப்படும் ஒப்பந்த அடிமைத்தனத்தின் ஒரு வடிவமாகும். குடும்ப உறுப்பினர்களாக வருபவர்கள் இந்த நாட்டுக்கு திறன் சார்ந்த பங்களிப்புகளை செய்யும் தகுதி வாய்ந்த புலம்பெயர்ந்தவர்கள் அல்ல.

எல்லையைப் பாதுகாக்க இராணுவ பலத்தை பயன்படுத்துவதோடு, சட்டவிரோத குடியேறிகளுக்கு அமெரிக்காவில் பிறந்த குழந்தைகளை நாடு கடத்துவேன்" என தெரிவித்துள்ளார்.

***எச்-1 பி விசா என்றால் என்ன?***

அமெரிக்க நாட்டில் குடியுரிமை பெறாமல், அங்கு தங்கியிருந்து வேலை செய்வதற்கு பிற நாட்டினருக்கு எச்-1 பி விசா வழங்கப்படுகிறது. இந்த எச்-1 பி விசாக்களை உலகளவில் இந்தியர்கள் மற்றும் சீனர்களே அதிகளவில் பெறுகின்றனர். அதிலும் குறிப்பாக ஐ.டி. என்று அழைக்கப்படுகின்ற தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிபவர்களிடம் இந்த விசாவுக்கு பெரும் மவுசு உள்ளது.

அமெரிக்கா ஒவ்வொரு ஆண்டும் 65 ஆயிரம் எச்-1 பி விசாக்களை வழங்குகிறது. அவற்றில் 20,000 விசாக்கள், அமெரிக்க நிறுவனங்களில் உயர்கல்வி பயின்ற மாணவர்களுக்காக ஒதுக்கப்படுகின்றன. எஞ்சிய 45 ஆயிரம் விசாக்களுக்கு இலட்சக்கணக்கானோர் விண்ணப்பிப்பதால் குலுக்கல் முறையில் விண்ணப்பதாரர்கள் தெரிவுசெய்யப்பட்டு விசாக்கள் வழங்கப்படுகின்றன. இந்த முறையை ஒழித்துவிட்டுத்தான் தகுதி அடிப்படையில் விசா வழங்குவேன் என விவேக் ராமசாமி கூறுகிறார்.

## ரஷ்ய பயணிகளின் கார்கள் போலந்தில் நுழையத் தடை



ரஷ்ய பயணிகளின் கார்கள் போலந்து நாட்டில் நுழையத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனுக்கு எதிராகப் போரில் ஈடுபட்டுவரும் ரஷ்யாவில் பதிவுசெய்யப்பட்ட பயணிகளின் கார்கள், தங்களின் 27 உறுப்புநாடுகளின் எல்லைப் பிராந்தியத்துக்குள் நுழைய ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தடை விதித்தது. அதன்படி, போலந்து நாட்டில் ஞாயிற்றுக்கிழமை முதல் தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. இதற்கான அறிவிப்பை அந்நாட்டு உள்துறை அமைச்சர் மரியூஸ் காமின்ஸ்கி வெளியிட்டார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

உக்ரைனில் நடந்துவரும் ரஷ்யாவின் கொடூரமான போர் நடவடிக்கைகளைக் கண்டித்து ரஷ்யா மற்றும் அதன் மக்கள் மீது விதிக்கப்படும் மற்றொரு தடை இது. சர்வதேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக ரஷ்யா இருந்துவருகிறது - என்றார்.

போல்டிக் கடல் பகுதியில் ரஷ்யாவுடன் எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் லித்துவேனியா, லாட்வியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளில் இந்தத் தடை ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுவிட்டது. இந்நிலையில், தற்போது போலந்திலும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தத் தடை நடவடிக்கை 'இனவெறித் தாக்குதல்' என ரஷ்ய பாதுகாப்பு கவுன்சில் துணைத் தலைவர் டிமித்ரி மெத்வதேவ் விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது.

உலக செய்திகள்

## துருக்கியில் டெஸ்லா கார் தொழிற்சாலை:

### அமெரிக்காவில் எலான் மஸ்க் - துருக்கி ஜனாதிபதி எர்டோகன் சந்திப்பு



துருக்கி ஜனாதிபதி எர்டோகன் ஐக்கிய சபை பொது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது எலான் மஸ்க்-ஐ சந்தித்துள்ளார்.

துருக்கியில் எலெக்ட்ரிக் கார் தயாரிக்கும் டெஸ்லா தொழிற்சாலையை தொடங்குவது குறித்து இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியதாக துருக்கி ஜனாதிபதி அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

"ஏ.ஐ., ஸ்டார்லிங், ஸ்பேஸ் எக்ஸ்-ன் செயற்கைக்கோள் இணையதள சேவை ஆகியவற்றில் ஒத்துழைப்பை வரவேற்பதாக எலான் மஸ்க்கிடம் எர்டோகன் தெரிவித்தார்" என எர்டோகன் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அப்போது ஸ்டார்லிங் வழங்க பாதுகாப்பு தொடர்பாக உரிமத்தை பெற ஸ்பேஸ்எக்ஸ் விரும்புவதாக மஸ்க் தெரிவித்துள்ளார். இந்த பேச்சுவார்த்தையின்போது எலான் மஸ்க் தனது மகனை கையில் வைத்திருந்தது போன்ற படங்கள் வெளியாகியுள்ளன.

டெஸ்லாவின் முதலீட்டுக்கான மிகவும் முக்கியமான நாடுகளில் துருக்கியும் ஒன்று என மஸ்க் தெரிவித்ததாக, துருக்கி தொழில்துறை அமைச்சர் மெஹ்மெட் ஃபதிக் கசிர் தெரிவித்துள்ளா'. இருவரும் துருக்கியின் ஆயுதமேந்திய வான்வழி டிரோன் திட்டம் குறித்தும் ஆலோசனை நடத்தினர் எனக் கூறினார்.

## புதிய ரிமோட் செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவிய சீனா



வானில் ஆதிக்கம் செலுத்தும் வகையில் சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் யோகன்-39 என்னும் தொலை உணர்வு செயற்கைக்கோளை ஜிசாங் செயற்கைக்கோள் ஏவுதளத்திலிருந்து நேற்றுமுன்தினம் ஏவியது.

இந்த செயற்கைக்கோள் அதிநவீன புவி கண்காணிப்புப் பணியை மேற்கொள்ளும் என்றும், யோகன் (Yaogan) 39 லாங் மார்ச்-2D கேரியர் ரொக்கெட் மூலம் 12:13 மணிக்கு (பெய்ஜிங் நேரம்) ஏவப்பட்டது மற்றும் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நுழைந்தது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## மீன் சாப்பிட்டு கை, கால்களை இழந்த கலிபோர்னிய பெண்



மீன் சாப்பிட்டால் உடலுக்கு நல்லது என சொல்வார்கள். ஆனால், அதனை சாப்பிட்ட பெண் ஒருவர் கை, கால்களை இழந்து உயிருக்குப் போராடி வருகிறார். அவரது பெயர் லாரா பராசாஸ் (வயது 40) அமெரிக்காவில் கலிபோர்னியாவில் வசித்து வருகிறார்.

சம்பவத்தன்று இவர் உள்ளூரிலுள்ள சந்தைக்கு சென்று திலப்பியா என்ற மீனை வாங்கி வந்து வீட்டில் சமைத்து சாப்பிட்டார். சிறிதுநேரத்தில் அவரது உடலில் மாற்றம் ஏற்பட்டது. கை விரல்கள் கறுப்பாக மாறின. பாதங்கள் மற்றும் கீழ் உதடு கறுப்பாயின. இதையடுத்து அவர் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனாலும் அவர் கோமா நிலைக்குச் சென்றார். சிறுநீரகமும் பாதிக்கப்பட்டது. மேலும் கை, கால்களும் முற்றிலும் செயலிழந்ததால் உயிருக்குப் போராடி வருவதாக லாரா பராசாஸின் தோழி மெசினா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது,

லாரா கிட்டத்தட்ட தன் உயிரை இழந்துவிட்டார். அவருக்கு சுவாசக் கருவி பொருத்தப்பட்டுள்ளது. கடல் உணவுகளில் பொதுவாக கொடிய பக்டீரியாக்கள் காணப்படும். இந்த உணவுகளை முறையாக தயார் செய்து சாப்பிடாவிட்டால் உடலுக்கு தொந்தரவு கொடுக்கும். சந்தையிலிருந்து வாங்கி வந்த மீனை சரியாக வேக வைக்காமல் அப்படியே சாப்பிட்டதால் இந்த நிலைக்கு ஆளாகிவிட்டார் - என்றார்.

தொடர்ந்து அந்தப் பெண்ணுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7